திருவள்ளுவர் ஆண்டு 2045

பெப்ரவரி - 2015

# செந்தமிழ்

திங்கள் இதழ்


தொகுதி : 59

பகுதி : 04

விலை ரூ.10/-




மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59

பகுதி : 04

பெப்ரவரி : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 1,000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5,000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

செயலாளர்

**ச.மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

பதிப்பாசிரியர்

பேராசிரியர் **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

# பொருளடக்கம்

சித்த மருத்துவமும் தமிழ்ச் சித்தர் மூலிகை மரபும் 5
மரு.முனைவர் சே.பிரேமா

கோயிலும் கல்வெட்டுகளும் (கி.பி.800-1400) 11
முனைவர் வெ.வேதாசலம்

புதினங்களில் காலந்தோறும் பெண்கள் சித்திரிப்பு 30
முனைவர் சி.சுந்தரி

# இதழ் மணம்

அன்புடையீர்,

பேராசிரியர், மருத்துவர் சே.பிரேமா, தஞ்சையிலிருந்து "சித்த மருத்துவமும் தமிழ்ச் சித்தர் மூலிகை மரபும்" என்னும் தலைப்பில் தமிழர் பன்னெடுங்காலமாகப் பயின்று வந்த இயற்கை மருத்துவம் - சித்த மருத்துவம் - மூலிகை மருத்துவம் குறித்து சிறந்த குறிப்புக்களைத் தந்துள்ளார்.

நோய் வராமல் தடுக்க, வந்த நோயைத் தணிக்க, உடலுக்கு நலம் தரும் உணவாக, நச்சுத் தன்மை உற்றபோது அதற்கு மாற்றாக மூலிகைகள் பயன் தருகின்றன. ஒரு நோய்க்கு ஒரு மூலிகை, ஒரு நோய்க்குப் பல மூலிகை, பல நோய்க்கு ஒரு மூலிகை, பலநோய்களைப் போக்கும் பல மூலிகைகளின் கூட்டு மருந்துகள் என மூலிகைகளின் பயன்பாடு விரிந்து மலரும் என்ற செய்தி இல்லம் தோறும் உற்று உணர வேண்டிய செய்தியாகும். மூலிகைகளைப் பற்றிய அறிவைப் பள்ளிக் கூடங்களிலே பாடமாக வைக்கவேண்டும். வீடுகளில் தொட்டிகளில் மூலிகைகளைப் பராமரிக்க வேண்டும். நோயின்றி வாழ இயற்கை மருத்துவம் பெரிதும் பயன்படும் என்னும் உண்மையை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதனால் பொருளாதாரம், நோயற்ற வாழ்வு, உறுதியாக பணிபுரியத் தேவையான சக்தி இவற்றை மக்கள் பெறுவதால் இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். மருத்துவர் சே.பிரேமா ஒரு முக்கியமான பொருளாதாரச் செய்தியையும் குறிப்பிடுகிறார். வேளாண் துறையில் மூலிகைப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் பொருளாதார மாற்றம் நிகழும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

சீனநாடு பத்தாயிரம் கோடிக்கு மூலிகை ஏற்றுமதி செய்கிறது. இந்தியா முந்நூறு கோடி அளவுக்குத்தான் ஏற்றுமதி செய்கிறது என்னும் செய்தியும் நம்மைச் சிந்திக்க

வைக்கிறது. இக்கட்டுரை தேசீய அளவிலும் தனிமனிதனும் சிந்திக்க வேண்டிய அரிய செய்தியைக் குறிப்பிடுகிறது.

அடுத்துப் பேராசிரியர் வெ.வேதாசலம், "கோயிலும் கல்வெட்டுக்களும்" என்னும் கட்டுரை வரைந்துள்ளார். கோயில் மரபுகளைத் தமிழகக் கல்வெட்டுக்கள் பொதிந்து வைத்திருப் பதையும் காலங்காலமாக மக்கள் சிந்தனை, பழக்க வழக்கம் ஆகியவற்றைக் காணும் வாய்ப்பினைக் கல்வெட்டுக்கள் நமக்கு அளிப்பதை கட்டுரை வாயிலாக நாம் நன்கு அறியலாம்.

அடுத்துப் பேராசிரியர் சி.சுந்தரி மேனாள் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், புதினங்களில் வரலாற்று நோக்கில் பெண்கள் படைக்கப்பட்டிருக்கும் அவலங்களைத் திறனாய்வு செய்துள்ளார். ஆசிரியர் பெண்களின் வாழ்க்கையை பின்வருமாறு சித்தரிக்கிறார்.

பெண்ணின் மண வாழ்க்கை பெரும்பாலும் பணத்தை யும், சாதியையும் கொண்டே நிச்சயிக்கின்றன. பொருந்தா மணங்களால் பெண்கள் துன்புறுகின்றனர். தவறு செய்யத் தூண்டப்படுகின்றனர். எப்போதும் சமூகப் பழக்க வழக்கங்கள் பெண்களுக்கு எதிராக அமைகின்றன. ஏனென்றால் அவை ஆண்களால் உருவாக்கப்பட்டவை" என ஆண் ஆதிக்கக் கொடுமைகளை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் அறிவுடையோர் மனம் கொள்ளத்தக்கது. சமுதாயம் இதனை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்னும் கருத்து தமிழ் உலகம் முழுவதும் உள்ள பெரியவர்களும் இளைஞர்களும் சிந்திக்க வேண்டிய உண்மையாகும்.

# சித்த மருத்துவமும் தமிழ்ச் சித்தர் மூலிகை மரபும்

மரு.முனைவர் **சே.பிரேமா**
தஞ்சை.

**முன்னுரை**

சித்த மருத்துவம், சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது ஆகும். மிகவும் தொன்மையான மருத்துவ முறைகளில் சித்த மருத்துவமும் ஒன்றாகும். சித்த மருத்துவம்,

1. தாது 2. தாவரம் 3. உயிரினம்

ஆகியவற்றால் செய்யப்பட்ட மருந்துகளை உள்ளடக்கியதாகும். பக்க விளைவுகள், எதிர் விளைவுகள் என்பன இல்லாத மூலிகை களாலான மருந்துகளைச் செய்யத் தாவரஇனம் இன்றியமையாத தாகும். தமிழ் நாட்டிலுள்ள மலைகள், காடுகளில் உள்ள மூலிகை களையும் சித்தர்கள் கண்டறிந்து பயன்படுத்தியுள்ளார்கள். அந்த வழியிலேயே சித்த மருத்துவம் இன்று இயங்கி வருகின்றது. சித்தர்களின் மூலிகை மரபு இன்று சித்த மருத்துவர்களால் பின் பற்றப்படுகிறது.

தொல் தாவரங்களின் தாயகமாகவே, தமிழகம் இருந் துள்ளது. இத்தாவரங்களைப் பற்றிய குறிப்புகள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் உள்ளன.

**உடல் காக்கும் மூலிகைகள்**

தொல்காப்பிய காலம் முதல் இன்று வரை, மக்களுக்கு ஏற்படும் துன்பங்களைப் "பிணி" என்றும் "நோய்" என்றும் அழைத்து வந்தனர். உடலைப் பற்றி வருவது "பிணி" என்றும், மனத்தைப் பற்றி வருவது "நோய்" என்றும் கூறினார்கள்.

"நோயும் இன்பமும், இருவகை நிலையில், அவரவர்
உறுபிணி தமபோல் சேர்த்தியும் மூப்பே
பிணியே, வருத்தம் மென்மையோடு
யாப்புறவந்த இளிவரல் நான்கே" – தொல்.பொருள்.194, 250.

நோய் பிணி இவைகளைப் போக்க, மூலிகைகளை, மருந்

தாகப் பயன்படுத்தினார்கள். சித்தர்கள், நோய் பிணி இவைகளை 4448 என்று வகைப்படுத்தினார்கள். "வேர் பாரு, தழை பாரு, மிஞ்சனக்கால் பற்ப செந்தூரம் பாரே" என்று முதலில் மூலிகை களால் செய்யப்பட்ட மருந்துகளைத் தந்துள்ளார்கள்.

இடைச்சங்க கால நூலான தொல்காப்பியம், மூலிகை களைக் குறிப்பிடுகின்றது. "வாயுறை வாழ்த்தே" எனத் தொடங்கும் நூற்பாவில் வேம்பும், கடுவும் குறிப்பிடப்படுகின்றன. வேப்பமரம் இந்தியாவுக்கு மட்டுமே உரிய சிறப்பான ஒன்றாகும். இதற்கான காப்புரிமையை அமெரிக்க நாடு பெற்றபோது அதைத்தடுக்க, வழக்குப் போட நேர்ந்த நிலையை அனைவரும் அறிவார்கள். வெண்சிறு கடுகைத் தீயிலிட்டுப் புகைத்தார்கள். இதன் மூலம், தொற்றுநோய்கள் ஏற்படாதவாறு தடுத்தார்கள். "வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும் நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்" - புறம்.296.

சங்கத் தமிழ் இலக்கியங்களில் 210 மரம், செடி, கொடிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. இத்தாவரங்களிலும் மருத்துவ குணங்களை உடைய தாவரங்கள் ஆய்வு செய்யப்படவில்லை. சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட மூலிகைகள் பற்றியவைகளே, சித்த மருத்துவத்தில், மலை வாகடம் என்னும் தனிப் பிரிவாக அமைந்தன, கற்ப மூலிகைகள் யாவும் "காய கற்பம்" என்றும், "சாகா மூலி" என்றும் பிரிக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டன. இதை ஒட்டிப் பல்வேறு நூல்கள் எழுந்தன.

மூலிகைகள் விளையுமிடங்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறைகள் என்பன இந்நூல்களில் உள்ளன. காலங்கிநாதரின் கொல்லி மலைக் கலிங்கம் 100, யாகோபு கற்பம் 1000 என்பன மூலிகை களைப் பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கும் நூல்களாகும்.

மூலிகைகளின் பெருமைகளைச் சங்க காலத்திலேயே உணர்ந்திருந்தார்கள். சான்றாக ஔவையார் கருநெல்லிக்கனியை, அருந்தத் தந்தது குறித்து அதியமானை ஓர் பாடலில் புகழ்ந் துள்ளார். Phyllanthus Emblica என்றழைக்கப்படும் பெரு நெல்லி வைட்டமின் சி சத்தைக் கொண்டது. இது புளிப்பு, இனிப்பு மற்றும் துவர்ப்புச்சுவை கொண்டது. சாதாரணமாக நமக்குக் குறைந்த செலவில் கிடைக்கும் சத்துள்ள பழம் நெல்லியாகும். இது மிகச்

சிறந்த ஈரல் தேற்றி மருந்தாகும். இது உடலில் எதிர்ப்பு சக்தியை நிலைப்படுத்தக் கூடியது. மொத்தத்தில் நெல்லிக்காய் ஒரு கற்ப மருந்தாகத் திகழ்கின்றது. இப்பெருமையை உடைய காரணத் தினாலேயே, இதை ஒளவையார்,

"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே" புறம் 91 (8–11)

போகர் கூறும் 44 வகையான காய கற்ப மூலிகைகளில் கருநெல்லியும் ஒன்று. கோரக்கர் மலைவாகடத்தில் கருநெல்லி, அருநெல்லி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. காலங்கிநாதரின் கொல்லிமலைக் கலிங்கத்திலும் கருநெல்லி இடம்பெற்றுள்ளது. கருவூராரின் வாத காவியம் 700. "மாயாதி விந்தையப்பா, கரு நெல்லி" என்று குறிப்பிடும். காலங்கி நாதரின் "கொல்லிமலை இரகசியம் 500" என்ற நூலில் கோரக்கர் குகை உள்ள இடத்திற்குப் பக்கத்தில் கருநெல்லி மரம் உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நாடானந்தம் பிறந்ததில் கால் உதித்த தீ
நாரமண்ணுண்டாய் மண்தான் நல்கவந்த
ஓடதியில் அன்னமும், அதல் உலகுநிற்கு உயிர்
வாய்ந்த அவ்வோடதியின் உரிமை சொல்வோம்"

என்று தேரன் குணவாகடத்தில் கூறுகின்றார். உணவு, மூலிகைகள், என்பனவற்றை மண் கொடையாகத் தருகின்றது. உயிரினங்கள், இதனால் உயிர் வாழ்கின்றன என்று மூலிகைகளின் பெருமையைப் போற்றுகின்றார். கருநெல்லியின் சிறப்புக் குறித்து,

"பதினைந்தென்னும சன்னி, பாதத்தயக்கம்,
மதினைந்திட செய்வினை மாறும் பதியினில்
சனித்த கருவுருவம் தானும் வேறாகும்.
துனித்த கருநெல்லி மரத்தால்"

என்று தேரன் குணவாகடத்தில் கூறுகின்றார்.

"கொல்லி மலையைப் போன்றே அகத்திய மலையும் 75 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாகும். 1300 சதுர கிலோ

மீட்டர் பரப்பளவை உடையது. இதில் 1500 வகை உள்ளுயிரித் தாவரங்கள் உள்ளன. 500 வகைகள் அழியும் நிலையில் உள்ளன. புல் குடும்பம், பயிறு குடும்பம், சூரியகாந்தி, ஆமணக்கு, எருக்கு, துளசி என்பன பெரும்பான்மையானவை. மொத்தம் 3500 தாவரங்கள் உள்ளன. இருபத்தொரு வகையான பனை வகைகள், 9 வகைப் பிரம்புகள், 4 வகையான சாதிபத்திரிகள் என்பன உள்ளன. சங்க காலத்தில் கூறப்பட்ட பல்வேறு மூலிகைகளின் பயன்பாடு, பிற்காலத்தில் மாறுபட்டுள்ளன.

சான்றாகக் கரிசாலையை எடுத்துக் கொள்ளலாம். கரிசாலையை முற்காலத்தவர்கள் கண்ணுக்கிடப்படும் மையாகப் பயன்படுத்தினார்கள். இதனை வணிக நோக்கில் செய்து வந்தார் கள். எனவே, கரிசாலையை வளர்க்க வரி விதிக்கப்பட்டது. பல்லவர் களின் காசாக்குடி செப்பேட்டில் "பிராமணிச் சக்காணமும், கண்ணீட்டுக் காணமும்" என்று வருகின்றது. இவ்வரிகள், கரி சாலைக்கு வரிகள் போடப்பட்டதைச் சுட்டும். ஆயினும் தற் காலத்தில் ஈரல் தேற்றிச் செய்கையைக் கொண்ட மருந்துகள் செய்யலாம் என்று கூறுகின்றார். கரிசாலையைப் போன்றே செங்கொடி வேலி என்ற சித்திரமூலம், செங்கழுநீர்ப் பூ என்பன வளர்க்க வரி விதிக்கப்பட்டிருந்தது. எவ்வகையான மருந்துகள் செய்யப்பட்டன என்ற ஆவணங்கள் இன்று கிடைக்கவில்லை. கொடிவேலியை நாட்டுப்புறங்களில் கருவை அழிக்கப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

மூலிகைகளை இனம் காண வேர், பட்டை, இலை, பூ, காய் எனும் பஞ்சாங்கத்தைக் கொண்டு பிரித்தறிந்தனர். மூலிகையின் அனைத்துப் பாகங்களும் பயன்படுமேயானால் அதனைச் சமூலம் என்றனர். மூலிகை வளம் மிகுந்த காடுகள், மலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று மூலிகைகளைக் காண்பித்து அவற்றைப் பறிக்கும் விதம், பறிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இவற்றைக் கற்பித்தனர்.

மூலிகைகளின் பெயர்களைப் பரிபாஷையில் அமைத்து அவர்களின் அறிவுத்திறனை வெளிப்படுத்தியும் மாணாக்கர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்தியும் வந்தனர். "இரு குரங்கின் கை"

என முசுமுசுக்கைக்கும் கரியமாலின் தொடை எனத் துளசிக்கும் பரிபாஷைகள் உள்ளன. இவை போன்றே அனேக மூலிகைப் பெயர்களை வியக்கத்தக்க வகையில் குறிப்பிட்டுள்ளனர். பட்டறிவும் அனுபவமும் உள்ள மருத்துவர்கள் இவற்றை ஆய்ந்து அறிவார்கள்.

இன்றைய கல்வி முறை - வாழ்க்கை முறை - மிகவும் மாறிவிட்டது. இதனால் காடுகளில் மாணவர்கள் அலைந்து திரிய வேண்டிய அவசியமில்லை.

"தொட்டுக் காட்டாத வித்தை
சுட்டுப் போட்டாலும் வராது"

என்பார்கள். ஆனால் இன்று கணிப்பொறி வழி பலமுறை தொட்டுக் காட்டிவிடலாம். எனினும் அறிவு வளர்ச்சிக்கு இம்முறை வித்திடாது. மேலும், மனித நேயமும் இதனால் அறிய முடியாததாகும்.

பல எளிய மூலிகைகளைக் கூட அறியமுடியாத அளவில் அடுக்கு மாடிக்கட்டிடங்களில் மக்கள் வாழ்கிறார்கள். இயற்கை யோடு இயைந்த வாழ்வு இன்று செயற்கையாக மட்டுமே உள்ளது. பாரம்பரிய முறையைப் பயன்படுத்த நினைப்பவர்களுக்குக் கூட வழிகாட்டுபவர்கள் யாருமில்லாத நிலை.

மனிதன் தோன்றும் போதே மருத்துவம் தோன்றி யிருக்கலாம். ஐம்பூதங்களை வணங்கவும் அவற்றால் வாழவும் மனிதன் கற்றுக் கொண்டான். உலகின்கண் உள்ள ஐம்பூதங்களை உடலின் கூறுகளாக்கி அவற்றின் மிகுதி குறை இவற்றை நேர் செய்ய ஐம்பூத மூலிகைகளையும் கண்டறிந்தான்.

இலை தழைகளைப் பச்சையாக உண்டு வந்த மனிதன் உணவு பக்குவப்படும் முறைகளையும் மருந்துகளைப் பக்குவப் படுத்தும் முறைகளையும் அறிந்து மேம்படுத்திக் கொண்டான். இவைகளை அவைகளின் செய்ம்முறைப்படி அக மருந்துகள் 32, புறமருந்துகள் 32 எனச் சித்தர்கள் பிரிவு படுத்தினர். இவை அனைத்திற்கும் மூலிகைகளே ஆதாரமாயின. தாதுப் பொருள்கள், சீவப் பொருள்களான மருந்துகள் என்றாலும் அவற்றைத் தூய்மை செய்ய, மருந்தாக்க மூலிகைகள் தேவைப்படுகின்றன. எனவே, மூலிகைகளில்லாமல் மருந்தில்லை.

நோய் வராமல் தடுக்க, வந்த நோயைத் தணிக்க, உடலுக்கு நலம் தரும் உணவாக, நச்சுத் தன்மை உற்றபோது அதற்கு மாற்றாக, மூலிகைகள் பயன்தருகின்றன. ஒரு நோய்க்கு ஒரு மூலிகை, ஒரு நோய்க்குப் பல மூலிகை, பல நோய்க்கு ஒரு மூலிகை, பல நோய் களைப் போக்கும் பல மூலிகைகளின் கூட்டு மருந்துகள் என மூலிகைகளின் பயன்பாடு விரிந்து மலரும்.

எந்தெந்தப் பருவ காலங்களில் எந்தெந்த மூலிகைகளை எவ்விதம் பயன்படுத்த வேண்டும் எனக் காயகற்ப மூலிகைகள் பற்றிய நுண்ணறிவு சித்தர்களுக்கு உண்டு. மூலிகைகள் கிடைக் காத சமயங்களில் அவற்றிற்கு மாற்றாகக் காய கற்ப மூலிகைகளில் கறுப்பு மூலிகைகளைத் தயாரிக்கும் முறை இவற்றில் கை தேர்ந் தவர்கள் சித்தர்கள்.

மாணாக்கர்களுக்கு மருத்துவத்தைப் போதிக்கும் போது அவை மறந்து விடாது இருக்கப் பாடல்களை அந்தாதியாக அமைத்து மனித மூளை எனும் கணிப்பொறியில் பதிவு செய்து வைத்தார்கள்.

**முடிவுரை**

இந்தியா மூலிகைகள் அதிகமுள்ள வளமான நாடாகும். சீனாவிலிருந்து 10,000 கோடிக்கான மூலிகைகள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. இந்தியாவிலிருந்து 300 கோடியளவுக்கு மூலிகைகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. மூலிகைகளின் பயன் பாட்டை, சித்தர்கள் பல நூல்களில் கூறியுள்ளார்கள். போகர் நிகண்டு 4448 நோய்களை, 4444 மூலிகைகளால் தீர்க்க முடியும் என்றுரைக்கிறது. திருவள்ளுவர் ஞான வெட்டி 1500 இல் 3,300 மூலிகைகளைப் பற்றிப் பேசுகின்றார். மேலும் கொங்கணர் 3000இல் செம்பு சத்துள்ளவைகள், வங்க சத்துள்ளவை என்று விளக்கு கின்றார். அகத்தியர் 12000 என்ற நூல் மூலிகைகளின் வலிமையை யும் பஞ்ச பூத மூலிகைகளையும் குறிப்பிடுகின்றது. எனவே, சித்தர்களின் மூலிகை மரபு பற்றியும், சித்த மருத்துவம் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மூலிகைகள் பற்றிய ஆய்வு தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும்.

# கோயிலும் கல்வெட்டுகளும் (கி.பி.800-1400)

முனைவர் **வெ.வேதாசலம்**, மதுரை.

இடைக்காலத் தமிழக வரலாற்றைக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமல் எழுத இயலாது. பல்லவர், சோழர், பாண்டியர், விசய நகர வேந்தர், நாயக்க மன்னர் காலங்களின் வரலாற்றை அறியத் துணைநிற்கும் அரிய சான்றுகளாகக் கல்வெட்டுகள் உள்ளன. பண்டைய அரசியல், பொருளியல், சமயம், சமுதாயம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றிற்குரிய தரவுகளின் கருவூலமாகக் கல் வெட்டுகள் விளங்குகின்றன. இந்தியாவில் இதுவரை 75000 கல் வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60000 கல் வெட்டுகள் விந்தியமலைக்குத் தெற்கே உள்ளன. அவற்றில் 25000 கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் உள்ளன. ஆவணங்களைக் கல்லில் அதிக அளவில் பொறித்து வைக்கும் வழக்கமும் அவற்றிற்கு நிலைத்த தன்மையைத் தரும் பண்பும் தமிழ்நாட்டில் இருந்துள்ளன.

கி.பி. 850 க்கும் 1300க்கும் இடைப்பட்ட சோழர், பாண்டியர் காலங்களிலேயே தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் மிகுந்த அளவில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தினைச் சார்ந்த 16500 கல் வெட்டுகள் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் காணப் படும் கல்வெட்டுகளில் தொண்ணூற்றைந்து விழுக்காடு கோயில் களிலேயே உள்ளன. சமூக, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் கால வாரியாக மாறுபடுகிறது. தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் தோன்றிய பக்தியியக்கத்தின் விளைவாகச் சமயம் சார்ந்த வாழ்வாகச் சமூகம் மாறியது. அதனைத் தொடர்ந்து ஏராளமான கற்கோயில்கள் பல்லவர், சோழர், பாண்டியர் காலங்களில் தோன்றின. கோயில் சமூகத்தின் கருப்பொருளாக ஊரின் மையமாக மாறியது. அந்நிலையில் கோயில்களுக்குப் போட்டி போட்டுக் கொண்டு ஆதரவளித்தவர்கள்

தாம் அளித்த கொடை ஆவணங்களை என்றும் அழியாதவாறு கோயில்களில் கல்வெட்டுகளாகப் பொறித்து வைத்தனர்.

இடைக்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில் ஏராளமான நிலங்களுக்கு உரிமைபடைத்த நிலவுடைமை நிறுவனமாக இருந்தது. பலருக்குக் கடனளிக்கும் பொருட்பலம் படைத்த வங்கியாக விளங்கியது. ஏராளமான மக்களுக்கு பணிவாய்ப்பிற்கு இடமளித்த சமூக நிறுவனமாகத் திகழ்ந்தது. உயர் கல்வியும் ஆரம்பக் கல்வியும் அளிக்கும் கல்விக்கூடமாக அமைந்தது. பலதரப்பட்ட கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாகவும், கலைப்பொருள் களின் கருவூலமாகவும் அமைந்தது.

ஆதரவற்றவர்களுக்கு 'ஆதரவளிக்கும்' அஞ்சினார் புகலிடமாக விளங்கியது. மருந்துகள் அளித்து, நோய்வாய்ப்பட்டோரைக் காக்கும் மருத்துவச் சாலையாகவும் நாடிவந்தோர்க்கு உணவளிக்கும் அறச்சாலையாகவும் அமைந்தது. அரசும் ஊரவைகளும் கோயில் கொடைகள் மீது கவனம் செலுத்தின. கோயில் வழிபாட்டின் மூலம் இவை இணைந்தன என்பதைக் கோயில் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, அவற்றின் அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றைக் கல்வெட்டுகள் மூலம் நன்கு அறிய முடிகிறது. கோயில்களின் வழிபாட்டு முறைகளையும் அக்கால மக்களின் சடங்குகளையும் சமூகப்பழக்கவழக்கங்களையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. கோயில்கள் பலதரப்பட்ட சமயங்களின் மையமாக விளங்கின. இதனால் அவற்றையொட்டிப் பல சமயங்களின் மடங்கள் தோன்றின என்பதையும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

**அரசு-கோயில்-ஊர்**

அரசு நிர்வாகம், கோயில்கள் மூலமாக, ஊரவைகள், சமூகம் ஆகியவற்றோடு உறவுகொண்டு நாட்டின் மீது தனது ஆளுமையை நிலைப்படுத்திக் கொண்டுள்ளது. அரசன் நாட்டின் பல பகுதிகளில் பயணம் செய்தபோது கோயில் மண்டபங்களிலும் கோயில் திருமுற்றங்களிலும் தங்கி மக்களைச் சந்தித்தான்.

மக்களின் குறைகளைக் கேட்டுக் கோயில் நிர்வாகத்தினையும் கண்காணித்தான். அரசன் நாட்டில் இருந்த நிலங்களை அளந்து வரி வித்தான். அவற்றை அளவிடும் அளவுகோல்களின் வரை படங்களையும் பெயர்களையும் கோயில் சுவர்களில் கல்வெட்டாகப் பொறித்து வைத்தான். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊரவையினர் நிலங்களை அளந்து வரி வாங்கினர். சோழ வந்தானுக்கு அருகிலுள்ள தென்கரைச் சிவன் கோயிலின் தென்புறச் சுவரில் *மனைக்கோல்*, *பாடகக்கோல்*, *மலைமேல் மலைக் குடிக்கோல்* என்று பல கோல்கள் காணப்படுகின்றன. இவை முறையே வீடு, நிலம், மேடுபள்ளமான இடங்களை அளக்கப் பயன்பட்டன. மன்னன் பெயரில் அமைந்த அளவுகோல்களும் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வரகுணபாண்டியன் (கி.பி.862-880), திருச் செந்தூர்க் கோயில் வழிபாட்டுச் செலவிற்காக 1400 பொற்காசு களைத் தானமாகத் தந்தான். அவற்றைப் பலவூர்களைச் சேர்ந்த சிறுநாட்டுத் தலைவர்களான அளற்றுநாட்டுக்கோன், இருஞ் சோனாட்டு இருப்பைக்குடிகிழவன், சாத்தம்பெருமான் ஆகியோர் மூலமாகக் கோயிலுக்குக் கொடுத்தான். திருச்செந்தூரைச் சூழ்ந்த பலவூர்களில் இருந்த ஊரவையார்க்கு அக்காசுகளைப் பங்கிட்டு அளித்து ஒவ்வொருவரும் குறிப்பிட்ட வழிபாட்டுப் பணியைச் செய்யு மாறு பணித்தான்.

ஒவ்வொரு ஊரவையினரும் தங்களிடம் அளிக்கப்பட்ட காசு களிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு கோயில் வழிபாட்டிற் காகும் பொருட்களைக் கொண்டு வந்து தந்தனர். அரசு, நாடு, ஊர் என்ற மூன்றிற்கும் இடையேயுள்ள உறவைத் திருச்செந்தூர்க் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. சோழநாட்டில் அரசுக்கு ஆதர வளித்த பிரமதாயம், நகரம், வேளாண் சமூக ஊர் ஆகியவற்றின் ஊரவையினராக விளங்கிய நிலவுடைமையாளர்கள் கி.பி.13 ஆம் நூற்றாண்டில் திருக்கடையூர்ப் பகுதியில் ஏற்பட்ட கலவரம் காரண மாகத் தங்கள் ஊர்களைவிட்டு வெளியேறினர். காலப்போக்கில் பாண்டிய அரசின் தலையீட்டால் அவர்களது ஊர்களில் குடியேற்றப் பட்டனர். இதற்கு நன்றிக்கடனாக அவர்கள் அரசனின் கல்யாணத்

திருமேனி நன்றாக இருப்பதற்காக நூற்றுஎட்டுத் திருநந்தா விளக்குகள் திருக்கடையூர்க் கோயிலில் எரித்துள்ளனர்.

சமயம் சார்ந்த மக்களின் மனத்தில் இடம்பிடிக்கும் முறையில் பல்லவர், சோழர், பாண்டியர் போன்ற பெருமன்னர்கள் ஏராளமான கோயில்களைத் தமிழ்நாட்டில் எடுப்பித்துள்ளனர். பல்லவ மன்னன் இராசசிம்மனால் எடுப்பிக்கப்பட்ட மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும், காஞ்சிபுரம் கயிலாச நாதர்கோயிலும் முதல் இராசராசனால் வானுயர எடுப்பிக்கப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயிலும், முதல் இராசேந்திர சோழனால் எடுப்பிக்கப்பட்ட கங்கை கொண்ட சோழீசுவரர் கோயிலும் அக்காலச் சமய எழுச்சியைக் காட்டும் கலைக்கூடமாக இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. தமிழ்நாட்டுப் பேரரசர்கள் தங்கள் ஆளுமையை அப்பெருங் கோயில்கள் மூலம் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள். அக் கோயில்களில் தனிக் கவனத்துடன் அவர்களால் செய்து வைக்கப் பட்ட சிற்பங்கள் பேரரசுத்தன்மையை உணர்த்துகின்றன. முதல் இராசராசனின் தஞ்சைக் கோயில் அவன் வெற்றியில் குவித்த செல் வங்களைக் காத்து நிற்கும் ஆன்மீகக் கருவூலமாக விளங்கியது என்பதைத் தஞ்சைக்கோயில் கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. சோழர்கள் தங்கள் வெற்றியின் போது கண்டுகளிக்கப் பல நாட்டுத் தெய்வவுருவங்களை எடுத்துவந்து தமிழ்நாட்டுக் கோயில்களில் வைத்து வழிபட்டனர். தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள சாளுக் கியரின் துவாரபாலர் சிற்பத்தின் அடியில் 'உடையார் ஸ்ரீவிஜய ராஜேந்திரசோழதேவர் கல்யாணபுரம் எறிந்து கொடுவந்த துவார பாலர்' என்ற கல்வெட்டுக் காணப்படுகிறது.

ஊரவையினர் கோயில் பணிகளில் ஈடுபட்டுக் கோயில் தொடர்பான ஆணைகளை நிறைவேற்றி வைத்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வளமிக்க ஊர்களில் இருந்த கோயில் களின் உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை மூன்றுகை மாசேனை போன்ற படைவீரர்கள் ஏற்றுக் காத்துநின்றனர். கோயில் களைத் திருப்பணி செய்தபோது அவற்றிலுள்ள பழைய ஆவணங் கள் படியெடுக்கப்பட்டன. திருப்பணி முடிந்ததும் மீண்டும் அவற்றில் பொறிக்கப்பட்டன. மானாமதுரை வட்டத்திலுள்ள இடைக்காட்டூர்ச்

சிவன் கோயில் புதுப்பிக்கப்பட்டபோது பாண்டியனின் ஆணைப்படி அக்கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு மீண்டும் கோயில் விமானத்தில் பொறிக்கப்பட்டன. கண்டராதித்த சோழனின் மனைவியார் செம்பியன்மாதேவியார் தாம் திருக்கற்றளியாக மாற்றிய கோயில்களில் முன்பிருந்த கல்வெட்டுகளைப் படியெடுத்துத் திருப்பணி முடிந்ததும் மீண்டும் அக்கோயிலில் வெட்டுவித்துள்ளார்.

**கோயில்கள் உருவாக்கம்**

கோயில்களைப் புதியதாக முழுமையாகக் கட்டியது குறித்துக் கல்வெட்டுகள் பேசுகின்றன. பழங்காலத்திலிருந்து தொன்றுதொட்டு இருந்துவரும் கோயில் பகுதிகளைக் காலந் தோறும் அவ்வப்போது தனித்தனியாகப் பலர் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவை கோயிலின் காலத்தை அறியத் துணைபுரிகின்றன. மதுரைக்கு அருகிலுள்ள ஆனை மலைக் குடைவரைக்கோயிலை கி.பி.770இல் பராந்தக நெடுஞ் சடையனின் முதன்மந்திரிகள் மாறன் காரி, மாறன் எயினன் என்பவர்கள் தோற்றுவித்தனர். மதுரைக்கு அருகிலுள்ள கீழ் மாத்தூர்ச் சிவன் கோயிலைச் சோழன் கலைகொண்ட வீர பாண்டியன் காலத்தில் அவனது அதிகாரி தமிழவேள் என்பவன் ஸ்ரீகண்டேஸ்வரம் என்ற பெயரில் புதியதாகத் தோற்றுவித்துள்ளான். திருமயம் வட்டத்துச் சுந்தரம் சிவன்கோயிலின் பல பகுதிகளைப் பலர் தனித்தனியாக உருவாக்கியுள்ளனர். பொன்னமராவதிச் சோழீசுவரர் கோயிலின் விமானத்தை எடுப்பித்து அங்குள்ள கருவறையில் சிவலிங்கத்தை நிசதராசன் பிரதிட்டை செய்துள்ளான். திருத்தங்கல் பெருமாள்கோவிலையும் சிவன்கோவிலையும் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அதிட்டானம் முதல் கலசம் முடிய கற்றளியாக அவனது அதிகாரி தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோழன் உய்ய நின்றாடுவானான குரு குலத்தரையன் மாற்றியிருக்கிறான்.

விமானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று மாளிகை, (திருச்சுற்று நடைமாளிகை, சுற்றாலை) திருமடைப் பள்ளி, பரிவாரக் கோயில்கள், அம்மன், நாச்சியார் கோயில்கள், மண்டபங்கள், கோபுரங்கள் எடுத்தமை பற்றியும் கல்வெட்டுகள்

கூறுகின்றன. கோயிலின் உறுப்புகளான திருவாசல், திருநிலைக் கால், படி, படியிடை, பலிபீடம், தூண் சித்திரகண்டக்கால், திருப்பூப் பலகை, கோமுகம், சாளரம் ஆகியவற்றை எடுத்தமை பற்றியும கல்வெட்டுகள் பேசுகின்றன. கோயிலில் உள்ள செப்புத் திருமேனிகளையும், கற்றிருமேனிகளையும் எழுந்தருளி வித்தவர்களின் பெயர்களும் கல்வெட்டுகளில் வருகின்றன. அருப்புக் கோட்டைச் சிவன்கோயில் விமானத்தின் தேவ கோட்டங்களில் உள்ள இலிங்கபுராணதேவர், துர்க்கையர் சிற்பங்களைச் செய்வித் தவரின் பெயர்கள் அவற்றின் அடியில் பொறிக்கப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர்ச் சிவன்கோயிலில் தேவ கோட்டத்துத் தட்சிணாமூர்த்தி உருவத்தினை அழகிய பாண்டிய தெட்சிணாமூர்த்தி என்ற பெயரில் மயிலேறுவான் அடியார்க்கு நல்லான் ஆன அரும்புகழளித்த பாண்டியதேவர் செய்வித்துள்ளார். முதல் இராசராசனின் தஞ்சைக் கோயிலில் ஏராளமான செப்புத் திருமேனிகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று மெய்ப்பொருள் நாயனார் திருமேனியாகும். கல்வெட்டில் இத்திரு மேனி, 'தத்தா நமரேகாண்' எனும் மிலாடுடையார் செப்புத் திருமேனி என்று குறிப்பிடப்படுகிறது.

**கோயில் நிர்வாகம்**

கோயிலை நிர்வாகம் செய்தவர்கள், கண்காணித்தவர்கள், பல வேலைகள் செய்த கோயில் பணியாளர்கள் பற்றி விரிவாகக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன. கோயில் நிர்வாகம் செய்தவர்களைத் தேவகன்மிகள், பதிபர்த மூலப்பட்டுடையார், பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசாரிய தேவகன் மிகன, ஸ்ரீமாஹேசுவரர், ஸ்ரீமாஹேஸ்வரக்கண்காணியார், ஸ்ரீருத்திர மகேசுவரர், ஸ்ரீபன்மாஹேசுவரர், ஸ்ரீவைஷ்ணவர், அகநாழிகையார், உண்ணாழிகையார், மூலப்பருடையார், மூலப்பருடைசபையார், மூலப்பருடைப் பெருமக்கள் என்று கல்வெட்டுகள் குறிப்பிடு கின்றன. இவர்கள் ஸ்ரீகாரியம்செய்வார், ஸ்ரீகாரியம் ஆராய்வார், ஸ்ரீகாரியம் திருத்துகின்றவர், தன்மிகள், தானத்தார், குளங்களிலார், ஸ்ரீகரணத்தார் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். பல பெருமக்கள்

சேர்ந்து சிறுசிறு குழுக்களாகவும் கோயில் காரியங்களில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கிருஷ்ணகணப்பெருமக்கள், வீரகணத் தார், சாத்தகணத்தார், அமிர்தகணத்தார், புண்ணிய கணத்துப் பெருமக்கள், கார்த்திகைக்கணப் பெருமக்கள், திருநட்டகணப் பெருமக்கள் என்று அழைக்கப்பட்டனர்.

கோயிலின் தேவைக்குகேற்ப ஏராளமான பணியாளர்கள் இருந்துள்ளனர். இவர்கள் பதவி, செய்யும் வேலை, தகுதி, சம்பளம் குறித்து விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கோயில்களில் கோயில் கணக்கு, ஸ்ரீ பண்டாரம், ஆவணம், ஸ்ரீகாரியம்செய்வான், ஸ்ரீகாரியம் ஆராய்வான், சிவபிராமணர், பட்டர், பரிசாரகர், அடுவார், தேவரடியார், நட்டுவர், நீர்கொணர்வார், பூவிடுவார், தழையிடுவார், பூத்தொடுப்பார், இடையர் (மன்றாடி, வெட்டிக்குடி) உவச்சர், ஈரங் கொல்லி, தச்சாசாரியர், கொல்லர், கைக்கோளர், வேட்கோவன் (குயவன்) மெழுவாள், விறகிடுவார், அடுவான், ஸ்ரீபாதம்தாங்கி, மெய்க்காவல், ஜோதிடர், திருப்பதியம்பாடுவார் என்று பலர் பணி புரிந்துள்ளனர். தஞ்சைக் கோயிலில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் பலர் (48 பேர்கள்) இருந்தனர். அவர்களோடு உடுக்கை வாசிப்பான் (ஒருவர்) கொட்டிமத்தளக்காரரும் (ஒருவர்) அமர்த்தப் பட்டனர். தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் தஞ்சைக் கோயிலில் தளிச்சேரிபெண்டுகள் 400 பேர்கள் இருந்தனர். அவர்களுடன் நட்டுவம் (12 பேர்) வானம்பாடி (4பேர்) வங்கியக்காரர் (குழல்) (3 பேர்), தமிழ் பாடுவார் (4 பேர்), கொட்டிமத்தளம் (2 பேர்), முத்திரை சங்கு (3 பேர்), பக்கவாத்தியர் (5 பேர்), காந்தவர் (75 பேர்), திருவாய்க்கேழ்வி (5 பேர்) ஆகியோரும் இருந்தனர். தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தவர்விகளுக்கும் நாயகம் செய்ய இருவர் அமர்த்தப்பட்டனர். அவர்கள் தொடர்பாக மேல்கணக்கர் ஒருவரும் கீழ்க்கணக்கு ஏழுபேர்களும் நியமிக்கப்பட்டனர். பதினோரு பேர்கள் கொண்ட உவச்சர்களின் (சகடை கொட்டிகள்) ஆறு குழுக்கள் இருந்தன. இவற்றில் மொத்தம் அறுபத்தாறு பேர்கள் பணிபுரிந்தனர். திருப்பள்ளித்தொங்கல் பிடிப்பார் (12 பேர்), விளக்குடையார் (8 பேர்), நீர்தெளியான் (4 பேர்), சன்னாளியார் (2 பேர்), திருமடைப் பள்ளிக்குசவர் (11 பேர்), வண்ணத்தார்கள் (2

பேர்), காவிதிமை (இருவர்), நாவிசம் (இருவர்), திரு. (கணி), (2+4), கொலினமை செய்வார் (இருவர்), அம்பட்டன் (ஒருவர்), தய்யான் (2 பேர்), இரத்தினத்தய்யான் (ஒருவன்), கன்னான் (ஒருவன்), தச்சாசார்யம் (5 பேர்கள்), தச்சு (இருவர்), பாணன் (4 பேர்), கண்காணித்தட்டாண்மை (இருவர்), பண்டாரிகள் (நால்வர்), ஸ்ரீவிரகர் (170 பேர்), கணக்கர் (6 பேர்), கீழ்க்கணக்கர் (12 பேர்) நூற்றுப்பதினெட்டு ஊர்களைச் சார்ந்த நூற்றுப்பதினெட்டு மெய்க் காவலர்கள் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர். மொத்தத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் முதல் இராசராசன் காலத்தில் தஞ்சைக் கோயிலில் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வழிபாடு**

கோயில்களில் நாள்வழிபாடு, திங்கள்வழிபாடு, ஆண்டு வழிபாடு, சிறப்புவழிபாடு என்று பலவகையான வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட பொருள்களோடு, நிலம், காசு, அவற்றின் மதிப்பு ஆகியவற்றையும் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இறைவனுக்குத் திருமஞ்சனம், திருமெய்ப்பூச்சு, திருமேனியில் அணியும் ஆடை, ஆபரணங்கள் பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இறைவனுக்குப் படைக்கப்பட்ட திருவமுது பிறபடையல் பொருட்கள் பற்றியும் கல்வெட்டுகள் தெளிவான செய்திகளைத் தருகின்றன.

**திருமஞ்சனம்**

திருமஞ்சனத்திற்காகப் பால், தயிர், நெய், கோமியம், சாணம் ஆகியவை ஐந்தும் கலந்த பஞ்சகவ்யம் எனப்படும் புனிதநீர் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் வரகுணனின் திருச் செந்தூர்க் கல்வெட்டு இறைவனுக்குரிய வழிபாட்டு முறையைத் தெரிவிக்கும் பழமையான கல்வெட்டுகளில் ஒன்றாகும். திருச் செந்தூர்க் கோயிலில் இறைவன் திருமஞ்சனம் ஆடியருள பசுவின்பால், பசுவின் தயிர், இளநீர் (வழுவைஉட்பட) பயன் படுத்தப்பட்டன. திருமேனியில் பூசியருள மேல்தோல் சிரைத்த பற்று மஞ்சள், சந்தனக்குழம்பு, கற்பூரத்தோடு கட்டி அரைத்த சந்தனம் ஆகியவை அளிக்கப்பட்டன.

**ஆடை**

இறைவனுக்குரிய ஆடையை நெய்வதற்காகக் கோயிலில் திருமடைவளாகப் பகுதியிலேயே கம்மாளர்களும் அறுவை வாணியர்களும் குடியேற்றப்பட்டனர். சாதாரண ஆடையிலிருந்து உயர்தர ஆடைகள் வரை நெசவு செய்து கோயிலுக்குத் தரப் பட்டன. இவை ஸ்ரீ உடையாடை எனப்பட்டது. இறைவனுக்கு அளிக்கும் ஆடை தவிர ஒலியல், பாவாடை, மடைப்பள்ளி மேற்கட்டுப் புடவை, கல்புறைப் புடவை, கர்ப்பக்கிரகத்தில் மேற் புறம் கட்டும் மேற்கட்டி வெண்கூறை, கோயில் பணியாட்களுக்குப் புடவை ஆகியவை அளிக்கப்பட்டன.

**ஆபரணங்கள்**

இறைவன், இறைவி ஆகியோர்க்கு அணிவிக்கப்படும் மணிமுடிகள், உடல் முழுவதும் அணிந்துகொள்ளும் ஆபரணங்கள் பற்றியும் விரிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. தஞ்சை, திருவாரூர் போன்ற ஊர்களில் காணப்படும் சோழர் கல்வெட்டுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

தஞ்சைக் கோயில் கல்வெட்டில் கண்டநாண், புல்லிகை கண்டநாண், பாசமாலை, மாணிக்கத்தின்தாலி, பாகுவலயம், குருவிந்தம், இரத்தின வளையல், திருக்கைக்காறை, இரத்தின கடகம், பவளக்கடகம், திருப்பட்டிகை, முத்தின் உழுத்து, மாணிக் கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகக்கிடுகு, இரத்தின மோதிரம், நவரத்தினமோதிரம், பிருஷ்டக்கண்டிகை, ஸ்ரீ சந்தம், வலத்திருவடிநிலை, இடத்திருவடி நிலை என்று ஐம்பத்திற்கு மேற்பட்ட ஆபரணங்களின் பட்டியல் காணப்படுகிறது. திருநெல் வேலி மாவட்டம் வீரவநல்லூர் அம்மனுக்குக் கல்வடம், பாடகம், திருச்சேறை, முகக்காறை, முலைத்தடம், ஆரம், மாங்கல்யம், பட்டனக்காறை, தோடு, வளி, பஞ்சரம், ஏகவடம், தாழ்வடம் என்று பதிமூன்று வகையான ஆபரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

***திருவமுது***

திருவமுது படைப்பதற்கு அளிக்கப்பட்ட உணவு வகை களோடு அவற்றைச் செய்வதற்காக அளிக்கப்பட்ட பொருட்கள்,

அவற்றின் செய்ம்முறைபற்றியும் கல்வெட்டுகள் விரிவான செய்திகளைத் தருகின்றன. திருவமுதிற்காகச் செந்நெல் தீட்டல் அரிசி, பத்தெட்டுக்குத்தல், பழவரிசி, பசுவின் நறுநெய், பசுவின் தோய்தயிர், கருவாழைப்பழம், வாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை, அடைக்காய் ஆகியவை அளிக்கப்பட்டன. சாதத்துடன் வெஞ்சனமாகப் பலவகைக் காய்கறிகள் அளிக்கப்பட்டன. காய்கறிகள் துமிக்கவும், பொரிக்கவும் நறுநெய், காயம் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. புளிங்கறி, புழுக்குக்கறி, பொரிக்கறி, எற்றிக்கறி என்று நான்கு வகைக் காய்கறிகள் படைக்கப்பட்டன. தயிர்க்கூட்டும் இவற்றோடு சேர்க்கப்பட்டது. சமையலுக்குப் பயன் படும் பலசரக்குகளாக மிளகு, மஞ்சள், சீரகம், சிறுகடுகு, கொத்தம்பரி, எற்றிக்காய், பயிற்றுப்பருப்பு, சிறுபயிற்றுப்பருப்பு, சிறுபயிற்றுப்பொரி, தேங்காய், சுக்கு, உளுந்து ஆகியவை அளிக்கப்பட்டன. திருப்பணியாரத்திற்காகத் தேங்காயும் கருப்புக் கட்டியும் தரப்பட்டன. பண்ணியாரம் சுவையுடன் செய்வதற்குத் தேங்காய், கதலிப்பழம், சீரகம், மிளகு, சுக்கு, சர்க்கரை, கரும்பு, நெய், பயிறு ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன.

கும்மாயம் எனப்படும் பயிற்றுப்பொங்கல் பல கோயில் களில் திருவமுதாகப் படைக்கப்பட்டது. இது பயிற்றுப்போனகம் என்றும் அழைக்கப்பட்டது. இதனுடன் சர்க்கரையும் சேர்த்து அக்காரவடிசில் எனப்படும் சர்க்கரைப் பொங்கலைப் படைத்தனர். விசயநகரவேந்தர் கல்வெட்டுகளில் முக்கிய இனிப்புப் பொருளாக அதிரசம் இடம்பெற்றது. இவற்றுடன் இட்லியும், தோசையும் திருவமுதாகக் கோயில்களில் இடம்பெற்றன. பிட்டு என்ற அளவு குறைவான இனிப்புப் பலகாரத்தைச் சோழர் காலத்திலிருந்து கல்வெட்டுகளில் காணமுடிகிறது. பூரியும், அப்பமும் இக்காலக் கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. கி.பி.11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராசேந்திரன் கல்வெட்டில் அரிசிப்பூரி திருவமுதாக இடம்பெற்றுள்ளது. பிள்ளையாருக்குப் படைக்கப் படும் மோதகமும் கல்வெட்டில் இடம்பிடித்துள்ளது. திருவமுது படைப்பதற்காக வாழை இலைகள் தரப்பட்டன. உணவு உண்ட பின் வெற்றிலை போடுவதற்காக வெற்றிலை, அடைக்காய்

(நூறுநூற்றமுது) சுண்ணாம்பு ஆகியவையும் இறைவனுக்குப் படைக்கப்பட்டன.

**நந்தவனங்கள்**

ஒவ்வொரு கோயிலுக்கும் வழிபாட்டிற்குரிய பூக்களை அளிப்பதற்கு நந்தவனங்கள் இருந்தன. இவற்றிற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம் என்று அழைக்கப்பட்டன. இவற்றில் பணி செய்யும் ஆட்கள் நந்தவனம் செய்வார், நந்தவனக்குடிகள், நந்தவனம் இறைக்கும் அருந்தவத் தோர் என அழைக்கப்பட்டனர். நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என்று பலவகையான மலர்களைக் கோயில் வழிபாட்டிற்கு இவர்கள் கொண்டு வந்து தந்தனர். குவளை, செங்கழுநீர், மல்லிகை, பெருஞ் செண்பகம், சிறுசெண்பகம், இருவாட்சி, தாமரை, அல்லி என்று பலவகையான பூக்களைப் பூசைக்குப் பயன்படுத்தினர். பூ நந்த வனங்களிலிருந்து பூக்களைப் பறித்து அவற்றைக் கோயில்களில் கொண்டு வந்து சேர்ப்பதற்குப் பணியாட்கள் இருந்தனர். கோயிலில் இருந்த பூமண்டபங்களில் அவற்றைத் திருப்பள்ளித் தாமம் என்று அழைக்கப்பட்ட மாலையாகத் தொடுப்பதற்கு ஆண் களும் பெண்களும் இருந்தனர். தேவரடியார் பெண்களும் பூத்தொடுக்கும் பணியில் ஈடுபட்டனர். திருப்பத்தூர் இரண்டாம் வரகுணபாண்டியன் கல்வெட்டுகோயிலுக்கு அளிக்க வேண்டிய திருப்பள்ளித் தாமத்தின் அளவை 'இருவிரல் அகலத்து இரண்டிற்கு நறும்பூ இட்டுத் தொடுத்தன இருமுழ நீளத்தன ஒரோவடமாக நியதி பதினைந்துவடம் இடுவதாக' என்று குறிப்பிடுகிறது.

**திருநாட்கள்**

நான்தோறும் கோயில்களில் நடத்தப்பெறும் வழிபாடு தவிர ஒவ்வொரு திங்களிலும் குறிப்பிட்ட நட்சத்திரத்தன்று திருவிழாக்கள் நடைபெற்றன. சித்திரைவிசு, சித்திரை பௌர்ணமி, வைகாசி விசாகத்திருநாள், ஆனிமூலத்திருநாள், ஐப்பசி அசுவினித்திருநாள், ஐப்பசித் திருவோணநாள், கார்த்திகைத் திருநாள், மார்கழித் திருவாதிரை, மார்கழி ஏகாதசி, தைப்பூசத் திருநாள், மாசிமகத் திருநாள், மகாசிவராத்திரி, பங்குனி உத்திரத் திருநாள் என்று பல மாதத் திருநாட்கள் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. மேலும் திருக்

கல்யாணம், பிரதோசம், திருவேட்டைத் திருநாள், தேர்த்திருநாள் என்று பல திருநாட்கள் பற்றிக் கல்வெட்டில் குறிப்புகள் வருகின்றன. இவை தவிர மன்னர்கள், அரச உறவினர்கள், அதிகாரிகள் ஆகியோரது பிறந்த நாட்களில் கோயில்களில் சிறப்பு சந்தி ஏற்படுத்தப்பட்டுத் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. மன்னர்களின் வெற்றியைக் குறிக்கும் முறையிலும் திருநாட்கள் கொண்டாடப்பட்டுள்ளன.

**கோயில் பொருளாதாரம்**

இடைக்காலத் தமிழ்நாட்டில் கோயில்கள் படிப்படியே வளர்ந்து தொடக்கத்தில், காசு, கால்நடைகள், பொன், பிற பொருட்கள் என்று பல கொடைகளைப் பெற்றன. பின்னர் என்றும் மதிப்புக்குறையாத நிலங்களை நிலையான வருமானமாகப் பெற்றன. நிலங்களிலிருந்து வந்த நெல் கோயில் பணியாளர் களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டது. கோயில் செலவினங் களுக்கும் பயன்படுத்தப்பட்டது. கோயிலில் நிலையாகப் பணிபுரிந் தவர்களுக்கு ஊழிய மானியமாக நிலங்கள் கொடுக்கப்பட்டன. கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஊர், தேவதானம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டது. சமண, பௌத்த கோயில் களுக்குத் தரப்பட்ட நிலங்கள் பள்ளிச்சந்தம் எனப்பட்டது. பிற் காலத்தில் இசுலாமியர் வழிபாட்டிற்கு அளிக்கப்பட்ட நிலக் கொடையும் பள்ளிச்சந்தம் என்று கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது. பெருமாள் கோவிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் திருவிடையாட்டம் எனப்பெயர் பெற்றது. கோயிலுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட வெள்ளான்வகை ஊர்கள் நல்லூர் எனப்பட்டன. கி.பி.11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் ஏராளமான நல்லூர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடபபடுகின்றன. இது இந்நூற்றாண்டுகளில் கோயில்கள் பெரும் நிலவுடைமை நிறுவனமாக மாறியதைக் காட்டுகிறது.

கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் அவற்றின் பயன்பாட்டிற்குத் தக்க முறையில் பல பின்னொட்டுப் பெயர்களோடு கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவை புறம், விருத்தி, போகம், கட்டளை என்று பலவாறாக அழைக்கப் பட்டன. கல்வெட்டுகளில் அர்ச்சனா போகம், தேவதான பணிசெய்

விருத்தி, வழிபாட்டுப்புறம், ஒழுக்கவிப்புறம், அவிப்புறம், உண்ணாழி கைப்புறம், மெழுகுக்குப்புறம், புதுக்குப்புறம், நந்தவனப்புறம், பூந்தோட்டப்புறம், செங்கழு நீர்ப்புறம், சந்திப்புறம், தட்டளிப்புறம், திருச்செண்டைப்புறம், நெய்ப்புறம், திருவிளக்கு நெய்ப்புறம், திருப் பணிப்புறம், திருமடைப் பள்ளிப்புறம், அடுக்களைப்புறம், அக்கிர காரப்புறம், திருப்பா வாடைப்புறம், அல் அமுதுப்புறம், திருவமுதுப் புறம், திருப்போனகப்புறம், அம்மாவாசைப்புறம், அர்த்தசாமிப் புறம், திருஞானப்புறம், திருமஞ்சனப்புறம், திருமாலைப்புறம், திருப் பள்ளியெழுச்சிப்புறம், திருவாய்மொழிப்புறம், உடுக்கைப்புறம் என்று பல வகையான நிலக்கொடைகள் குறிப்பிடப்படுகின்றன.

கோயில்கள் ஏராளமான நிலங்களைப் பெற்று விளங்கி யமையால் பலர் கோயில் நிலங்களைக் குத்தகை எடுத்துக் கொண்டு தங்கள் வாழ்வையும் வளப்படுத்திக் கொண்டனர். கோயிலுக்குச் சேர வேண்டிய நெல்லை ஆண்டுதோறும் கொண்டு வந்து கொடுத்தமை பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் வருகின்றன. சிலவேளைகளில் வரி செலுத்தாதவர்களின் நிலங்கள் ஏலம் விடப்பட்டு அதன் விலைப்பொருள் கோயிலுக்குக் கொடுக்கப் பட்டது. கோயில் நிர்வாகத்தினர் அறக்கொடைகள் மூலம் வந்த பொன்னை வட்டிக்கு விட்டு அவற்றின் மூலம் கோயில் காரியங் களைச் செய்தனர். ஊரின் உடனடித் தேவைகளுக்குக் கோயில் நிர்வாகம் உதவி செய்து சமூகத் தொண்டும் புரிந்துள்ளது. இளையான்குடி ஊரார் போசளப் படையெடுப்பின்போது அவர் களுக்கு வேண்டிய பொருளைத் தரமுடியாது தவித்த வேளையில் அவ்வூர்க்கோயில் நிர்வாகமும் உதவியது. கோயில் பண்டாரத்தில் இருந்த ஆபரணங்கள் விற்கப்பட்டுப் போசளர்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டது என்பதை இளையாங்குடி இராசேந்திர சோழீசுவரர் கோயில் கல்வெட்டு உணர்த்துகிறது.

**கோயிலும் கலையும்**

கோயிலில் நாள்தோறும் மற்றும் திருநாட்களின் போதும் ஆடலும், பாடலும் நடைபெற்றன. சாக்கைக்கூத்து, சாந்திக்கூத்து, தமிழகக்கூத்து, ஆரியக்கூத்து என்று பல்வகையான கூத்துகள் நடத்தப் பெற்றன. பல்லவர்காலத்திலிருந்து கோயில்களில் தேவரடியார்,

பதியிலார், தளிச்சேரிப்பெண்டுகள் என்று அழைக்கப்பட்ட நாட்டியப்பெண்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். தலைக் கோலிப்பட்டம் பெற்ற திறமை வாய்ந்த ஆடல் மகளிர் அரசன் காணும் வகையில் கோயில் மண்டபங்களில் தங்களது நாட்டியத்தை அரங்கேற்றினர். இவர்களுக்கு நாட்டியப்பயிற்சி அளிப்பதற்கும் அவர்களது நாட்டியத்தை அரங்கேற்றுவதற்கும் நட்டுவான்கள் கோயில்களில் இருந்தனர். இவர்களுக்குத் துணையாக உவச்சர் கள், தளி கொட்டுவான், தட்டளிகொட்டிகள் என்று அழைக்கப்பட்ட இசைவாணர்கள் கோயில் பணியில் அமர்த்தப்பட்டனர். இவர்களில் குழல், வீணை, உடுக்கை என்று பலவகை வாத்தியக்கருவிகளை வாசிப்போரும் இடம்பெற்றனர்.

திருவொற்றியூர்க் கோயிலில் இராசராசன் மண்டபத்தில் உறவாக்கின தலைக்கோலி என்பவள் மூன்றாம் இராசராசன் முன்பாக அகமார்க்கப்பாடலைப் பாடினாள். தஞ்சைக் கோயிலில் இராஜ ராஜேசுவர நாடகம் என்ற நாடகம் சாந்திக்கூத்தன் திரு பாலன் திருமுதுகுன்றனால் ஆடிக் காட்டப்பட்டுள்ளது. திருப்பாதிரிப் புலியூர்க் கல்வெட்டில் பூம்புலியூர் நாடகம் குறிப்பிடப்படுகிறது.

சிவன்கோயில்களில் தேவாரப்பாடல்களும் பெருமாள் கோயில்களில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் இசையுடன் பாடப்பட்டன. தேவாரப்பாடல்கள் திருப்பதியம் என்ற பெயரில் கல் வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றைப் பாடுவோர் திருப் பதியம் விண்ணப்பம் செய்வார் எனப்பட்டனர். இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருவாமாத்தூர்க் கோயிலில் இப் பணியில் பார்வையற்றவர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் துணையாகப் பணிசெய்ய அமர்த்தப்பட்டவர்கள் கண்காட்டுவார் என்று அழைக்கப்பட்டனர். திருப்பதியம் பாடுவதற்கென்று அமைந்த இடம் திருக்கைகொட்டி எனப்பட்டது. வைணவர்கள் கோயில்களில் திருவாய்மொழியும், திருப்பாவையும் குறிப்பிடத்தக்க இடம் பெற்றன.

**கோயிலும் கல்வியும்**

புராணம், இதிகாசம், வேதம் தத்துவம் ஆகியவற்றைப் படித்து விளக்கம் செய்யும் இடமாகக் கோயில்கள் இருந்தன

என்பதைப் பல கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. இராமா யணம், பாரதம் படிப்பதற்காக அளிக்கப்பட்ட நிலங்கள் இராமா யணவிருத்தி, பாரதவிருத்தி எனப்பட்டன. முற்காலச்சோழர் கல் வெட்டுகளில் வேதம் படிப்பதற்காக வேதப்பிராமணர் அமர்த்தப் பட்டனர் என்ற செய்தி உள்ளது. இதற்காக அளிக்கப்பட்ட நிலக் கொடைகள் வேதவிருத்தி, அத்தியானுவிருத்தி, கிடைவிருத்தி எனப்பட்டன. ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயிலிலுள்ள முதற்பராந்தகசோழனின் கல்வெட்டு வேதம் ஓத ஐந்து பிரா மணர்கள் அமர்த்தப்பட்டு அவர்கள் உணவிற்காக நிலமளிக் கப்பட்டதைக் கூறுகிறது. திருக்கோட்டியூர்ச் சிவன் கோயிலில் 'பிரபாகரம்' விளக்கம் செய்ய நிலக்கொடை அளிக்கப்பட்டது. சைவ நெறி நூல்கள் சிவதர்மம், திருஞானம் என்ற பெயரில் சிவன் கோயில்களில் படித்து விளக்கமளிக்கப்பட்டன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் பல கோயில்களில் சரஸ்வதி பண்டாரம் என்ற பெயரில் நூலகங்கள் இருந்துள்ளன. ஸ்ரீரங்கம் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாரத்தில் சரஸ்வதி, வேதவியாசர், அயக்கிரீவன் ஆகியோர்க்கும் திருமேனிகள் செய்விக்கப்பட்டு வழி படப்பட்டன. சேரன்மாதேவியில் துவாராயதிப்பன் கோயிலில் இருந்த சரஸ்வதி பண்டாரத்துக்கு இரண்டு மா நிலம் அளிக்கப் பட்டுள்ளது. பதிமூன்றாம் நூற்றாண்டில் சிதம்பரம் கோயிலில் இருந்த சரஸ்வதிபண்டாரம் குறித்து விரிவான செய்திகளைப் பிற்காலப்பாண்டியரின் கல்வெட்டு ஒன்று தருகிறது. இந்நூலகத்தில் இருந்த புத்தகங்களைப் பார்க்கவும் எழுதவும் அவிழ்த்து வாசித்துக் காட்டவும் திவ்விய ஆகமத்தை வாசிப்பிக்கவும், புராணம், சோதிடம் படிக்கவும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்நூலகத்தில் கிரந்தத்தில் எழுதப்பட்ட வடமொழிநூல்களோடு தமிழ் ஏடுகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இச்சரஸ்வதி பண்டாரம் மூன்றாம் குலோத்துங்கசோழனின் குருவான சோமேஸ்வரர் என்ற சுவாமிதேவரால் ஏற்படுத்தப்பட்டது. இவர் எழுதிய புத்தகங்களையும் இவரது சித்தாந்த இரத்தினாகரம் என்ற நூலையும் ஆராய்வதற்குப் பணியாளர் இங்கு நியமிக்கப்பட்டனர். இங்கு முன்பு எழுதி வைக்கப்பட்ட பழமையான ஏடுகளைப் புதிய

தாகப் படியெடுக்கவும் புதிய நூல்களை ஏடுகளில் எழுதிவைக்கவும் செல்லரித்துப் போன ஏடுகளைத் திரும்ப எழுதவும் பணியாளர்கள் இருந்தனர். மேலும் சிதம்பரம் கோயிலில் இருந்த விக்கிரம சோழன் திருக்கைக்கொட்டியில் வடமொழியிலும் தமிழிலும் இருந்த நூல்களைத் தேசாந்திரிகளுக்கும் வேண்டுவோர்க்கும் எழுதிக் கொடுக்கவும். ஒக்கப்படிக்கவும் பணியாளர் நியமிக்கப்பட்டனர். சிதம்பரம் கோயிலில் சோழர்காலத்தில் ஏற்படுத்திய இந் நூலகத்தைச் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251 - 1271) ஆதரவுதந்து அங்கிருந்த புலவர்களுக்கும் பணியாளர்களுக்கும் பல நிலக்கொடைகளை அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. கோயில் களில் பாலபாடக் கல்வியும் கற்றுத்தரப்பட்டது. மேலநெட்டூர் சிவன்கோயில் சிவப்பிராமணர்களுக்கு ஆகமங்கள் கற்றுக் கொடுக்க ஆகமவிருத்தி என்ற பெயரில் நிலமளிக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சார்ந்த மடங்களும் ஏராளமான ஏடுகளைச் சேர்த்து வைத்து வடமொழிக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் ஆதரவளித் துள்ளன.

கோயில் சுற்றாலைகள், மண்டபங்கள் ஆகியவை கல்விக் கூடமாகவும், கல்லூரிகளாகவும் அக்காலத்தில் விளங்கின. கி.பி.11 ஆம் நூற்றாண்டிலிருந்து, கோயில்களில் கல்விச் சாலைகள் இருந் தமை பற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன. முதல் இராசேந்திரன் காலத்தில் எண்ணாயிரத்தில் இருந்த கல்லூரியில் 340 மாணவர்கள் படித்தனர். இவர்களில் 270 மாணவர்கள் பொதுக்கல்வியும் 70 மாணவர்கள் சிறப்புக் கல்வியும் பயின்றனர். இவர்களுக்காக 14 ஆசிரியர்கள் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு ரூபாவதார இலக்கணம், வேதங்கள், சூத்திரங்கள், பிரபாகரமீமாமிசை, வேதாந்தம் முதலியவை தொடர்பாக வடமொழிக் கல்வி அளிக்கப் பட்டது. இது போன்ற கல்லூரி புதுச்சேரிக்கு அருகிலுள்ள திரிபுவனி யில் இருந்தது. இங்கு 240 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் இருந்தனர். இங்கிருந்த மாணவர்களுக்கு சத்யோஜாத சூத்திரங்கள், மனுசாஸ்திரம், வைகானச சாஸ்திரம், பாரதம், இராமாயணம் ஆகியவையும் கற்பிக்கப்பட்டன. திருமுக்கூடலில்

இருந்த சிறிய வடமொழிக் கல்லூரியில் 40 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் இருந்தனர். பாகூரில் இருந்த வடமொழிக் கல்லூரிகளில் 190 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் திருவாவடு துறையில் இருந்த கல்விக்கூடத்தில் வடமொழிக் கல்வியோடு மருத்துவக் கல்வியும் அளிக்கப்பட்டுள்ளது. திருவொற்றியூரில் இருந்த வியாகரண தியான மண்டபம் வியாகரணப் பள்ளிக்கூடமாக விளங்கியுள்ளது. மேற்கண்ட செய்திகள் சோழர்காலத்தில் வட மொழிக் கல்விக்கு அளித்த சிறப்பை உணர்த்துகின்றன. ஆனால் தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றிற்குக் கல்விச்சாலைகள் கோயில்களில் இருந்ததாக இதுவரை கல்வெட்டுக் குறிப்புகள் கிடைக்கவில்லை.

**கோயிலும் சமூகமும்**

கோயில் இடைக்காலச் சமூகத்தோடு நெருங்கிய உறவுடைய சமூக மையமாகத் திகழ்ந்தது. முக்கிய சமூக நிகழ்வுகள் கோயிலைச் சார்ந்து நடைபெற்றன. சமூகத்தில் நடைபெற்ற வழக்குகளில் முடிவில் வழங்கப்பட்ட தண்டனைகளில் சில கோயிலுக்குத் திருவிளக்கு எரிக்கும் பரிகாரமாகவே அமைந்தன. சோழர்காலத்தில் எலவானாசூர் என்ற ஊரில் தாய் ஒருத்தி தன்னுடைய குழந்தை ஒன்றின் மீது அரிசினத்தால் எறிந்த அரிமணங்கோல் தவறாக அடுத்தவர் குழந்தைமேல் பட்டுக் காயமுற்றது. இருபது நாட்கள் கழித்து அக்குழந்தை இறந்து போனது. இதனால் எலவானாசூர்க்கோயிலில் கூடிய நாட்டவையினர் அப்பெண்ணின் செயல் 'கைப்பிழைபா' டெனக் கருதி அவளைக் கோயிலுக்கு ஒரு திருநந்தாவிளக்கு எரித்துவர வேண்டும் என்று கட்டளையிட்டனர். அவளுடைய கணவனைக் கோயில் விமானப் பகுதியில் முப்பத்திரண்டு விளக்குகளை வைக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர். கி.பி.பதினோராம் நூற்றாண்டில் ஜம்பை என்ற ஊரில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்த முடியாத பெண்ணை அதிகாரிகள் துன்புறுத்தினர். அதனால் மனமுடைந்து நஞ்சு குடித்து இறந்துபோன பெண்ணின் பழிதீரக் கோயிலில் திருவிளக்கு எரித்தனர். ஒருவரோடு ஒருவர் போரிட்டு அதில் ஒருவர் இறந்து போன வழக்குகளின் தன்மை கருதி, கொலையாளிகளுக்குக்

கோயிலில் திருவிளக்கு எரித்துவரும் பரிகாரமே தண்டனையாக அக்காலத்தில் தரப்பட்டுள்ளது. நோயுற்றவரின் துன்பத்தைப் போக்கும் மருத்துவச் சாலைகள் கோயில் வளாகத்தில் நாள் தோறும் வெளியூரிலிருந்து வந்த தேசாந்திரிகளுக்கும், பயணிகளுக்கும் உணவு வழங்கப்பட்டது. இது இடைக்காலத்தில் கோயில்கள் சமூகத்தின் அறச்சாலைகளாக விளங்கின என்பதைக் காட்டுகிறது. இச்செய்திகள் தொடர்பாகப் பல கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மதுராந்தக வட்டம் திருமுக்கூடலில் கோயில் வருவாயிலிருந்து மருத்துவச் சாலை ஒன்றும் நடத்தப் பெற்றிருக் கிறது. இதில் மருந்துகள் அளிக்கும் மருத்துவர், அறுவைச் சிகிச்சை செய்யும் சல்லியக் கிரியை பண்ணுவான், அறுவைத் தொழில் செய்யும் நாவிதர், மருத்துவப் பணிமகளிர், மருந்து கொணர்பவர் ஆகியோர் இருந்தனர். வீரசோழன் ஆதுலர் சாலை என்று அழைக்கப்பட்ட இம்மருத்துவமனையில் ஓராண்டிற்குத் தேவையான பதினெட்டு வகையான மருந்துகள் இருந்துள்ளதை வீரராசேந்திர சோழனின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. தஞ்சையில் இருந்த சுந்தரசோழ விண்ணகரில் (பெருமாள் கோயில்) இராச ராசனின் தமக்கையான குந்தவை நாச்சியார் "சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலை" என்ற பெயரில் ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்தியுள்ளார். திருப்புகலூர், திருவாவடுதுறை, கடத்தூர், கூகூர், கீரகவூர் முதலிய இடங்களில் மருத்துவச் சாலைகள் இருந்தமை பற்றிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பஞ்சமும் வெள்ளமும் ஏற்பட்ட காலத்தில் கோயில்கள் மக்களுக்கு ஆதரவளித்துள்ளன. இவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து கடன் வாங்கி உயிர்பிழைத்துள்ளனர். ஆலங்குடி, எறும்பூர் முதலிய இடங்களிலுள்ள கல்வெட்டுகள் இதனைத் தெரிவிக்கின்றன. ஆலங்குடி மக்கள் கோயில் பண்டாரத்திலிருந்து 1101 கழஞ்சு பொன்னையும் 464 பலம் வெள்ளிப் பாத்திரங்களையும் கடனாகப் பெற்றுப் பஞ்சத்தைச் சமாளித்தனர். தேசாந்திரிகளாய் வந்தவர்களுக்கும், இறைவனது அடியவர்களுக்கும், சிவயோகிகளுக்கும், நாள்தோறும் பூசையின் முடிவிலும், திருவிழாக் காலங்களிலும் குறிப்பிட்ட அளவுள்ள உணவு சட்டியில் இட்டு வழங்கப்படும் வழக்கம் தமிழ்நாட்டுக்

கோயில்களில் பழங்காலத்தில் இருந்துள்ளது. இதனைச் சட்டிச் சோறு என்று திருவண்ணாமலை, குத்தாலம், ஆத்தூர், பேரூர் போன்ற பல இடங்களில் உள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

**முடிவு**

இடைக்காலத் தமிழ்நாட்டுச் சமூகத்தின் கருப்பொருளாக மையமாகக் கோயில்கள் திகழ்ந்துள்ளன என்பதை மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகள் உணர்த்துகின்றன. அரசன் மற்றும் மக்களின் ஆவணமான கல்வெட்டுகளில் தொண்ணூறு விழுக்காடு கோயில்களிலேயே பொறிக்கப்பட்டுள்ளன. இதனால் அரசியல், சமுதாயம் இரண்டிலும் கோயிலுக்கு இருந்த மதிப்பைப் புரிந்து கொள்ளமுடிகிறது. அரசு ஊரவையோடு இயைந்து கோயிலுக்கு ஆதரவளித்தது. அனைத்துத் தரப்பினரும் சமூகமதிப்பைப் பெற்ற கோயில் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். கோயில் பணிகள் மூலம் தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தினர். கோயில் கல் வெட்டுகள், கோயிலின் உருவாக்கம், அமைப்பு, நிர்வாகம், வழிபாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், நாகரிகம், பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் உறு துணை புரிகின்றன. கோயில்கள் கலைகள் வளர்த்த கலைக் கூட மாகவும், இருப்பிடம், உணவு, மருத்துவம், கல்வி முதலியவற்றைத் தந்த அறச்சாலையாகவும் இருந்தன. இடைக்காலச் சமூகம் கோயிலோடு பிரிக்கமுடியாத உறவுடையதாக விளங்கியது என்பதையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

# புதினங்களில் காலந்தோறும் பெண்கள் சித்திரிப்பு

முனைவர் **சி.சுந்தரி**, மதுரை.

நம்நாட்டில் கதை சொல்லும் மரபு மிகப்பழங்காலந் தொட்டே இருந்து வந்தது. ஆனால் இந்தியாவில் ஆங்கிலேயரின் வரவிற்குப் பிறகு ஏற்பட்ட கல்வி முறையினால், இறக்குமதி செய்யப்பட்ட நாவல் என்னும் கதை கூறும் இலக்கிய வடிவத்தினின்று அது மாறுபட்டதாயிருந்தது.

செய்யுள் வடிவத்திலிருந்த காப்பியங்கள் பெறாத வரவேற்பை நாவல்கள் பெற்றன. காப்பியங்கள் நல்ல புலமை உள்ளவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய செய்யுள் வடிவிலிருந்தன. அவை கடவுளரையும் மன்னர்களையும் அவர்களுடைய வீரதீரப் பராக்கிரமங்களைப் பற்றியும் பேசின. நாவல்களில் மிகச்சாமானிய மனிதனின் வாழ்க்கைப் போக்கும் அன்றாடப் போராட்டங்களும்கூடச் சித்திரிக்கப்படுவதால் வாசகர் அவர்களைத் தம்மையொத்த மனிதராக எண்ணி நெருங்கிய உறவு பூண்டனர். நாவல்கள் சமகால வாழ்க்கையைப் படம்பிடித்துக்காட்டின.

"காலப்போக்கில் தமிழ்நாவலைப் பாதிக்கும் அளவிற்குத் தமிழக சமூக வாழ்வில் மூன்று பெரும் சக்திகள் தோன்றி வளர்ந்தன. இவற்றில் இரு சக்திகள் இந்தியா முழுவதற்கும் பொதுவானவை. ஒன்று தமிழ்நாட்டிற்கு மட்டும் சிறப்பானது. தமிழ் நாவலைப் பாதித்த இச்சக்திகளில் ஒன்று தேசிய இயக்கம்; இரண்டாவது தொழிலாளர் - உழவர் சமூக விடுதலை இயக்கம். மூன்றாவது சுய மரியாதை இயக்கமும் அதன் கிளைவடிவங் களும்"1 என்கிறார் எஸ்.தோதாத்ரி. இம்மூன்று இயக்கங்களும் தமிழ்ச்சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாகத் தோன்றியவை. சமுதாயம் இருக்கும் நிலையின் அடிப்படையில் நாவல் ஆசிரியர்கள், தமக்கெனத் தனிக்கொள்கைகளை உருவாக்கிக்கொண்டு அவற்றை வெளிப்படுத்தும் வகையில்

நாவல் இலக்கியத்தைப் படைத்திருப்பதை அறிய முடிகிறது. இந்நாவல்களில் இடம்பெறும் பெண்களின் நிலை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**விடுதலைக்கு முந்திய நாவல்**

விடுதலைக்கு முந்திய நாவல்களில் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் முதன்மை இடம் பெற்ற குடும்பத்தைப் பற்றிச் சொல்லாமல் செல்ல இயலாது. மனிதனின் சமூக வாழ்வென்பது குடும்பத்தினின்றே தொடங்குகிறது. ஒரு சமுதாயத்தின் அச்சாணி 'குடும்பம்' என்பதில் ஐயமில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் நம்பிக்கையையும் பாதுகாப்பையும் நல்கிடும் குடும்ப அமைப்பு ஒரு சமூக நிறுவனமாகும்.

".....எப்படியோ குடும்பம் ஏதாவது ஒரு வடிவில் எப்போதும் நம்மோடு இருக்கும். மனத்தின் கற்பனைக்கு எட்டிய அளவில் எதிர்காலத்தில் குடும்பம் தொடர்ந்து, உண்மையில் சமூகத்தின் மைய உறுப்பாக (Nuclear Component) விளங்கும்."2

குடும்பத்தில் ஓர் அங்கமான பெண் வைக்கப்பட்டுள்ள நிலை சமுதாயத்திலும் பிரதிபலிக்கும்.

"எல்லாச் சமூகங்களிலுமே பெண்ணுக்கும் ஆணுக்கும் தனித்தனி நெறிமுறைகளும் தனித்தனி நிலைகளுமே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எந்தச் சமூகத்திலும் ஆணையும் பெண்ணையும் ஒரே மாதிரியாக நடத்துவதில்லை. ஆணும் பெண்ணும் ஒரே மாதிரிச் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை. ஒரே மாதிரியான நோக்கங்களையும் கொண்டிருப்பதில்லை. குறிக் கோள்களும் பாதைகளும் கூட ஒரே மாதிரியாயிருப்பதில்லை"3 என்பது சமூகவியலாளர் கருத்து.

**பிரதாப முதலியார் சரித்திரம் (1879)**

தமிழில், மாயூரம் வேதநாயகம் பிள்ளை படைத்த முதல் நாவல் இது. பிரதாப முதலியார் சரித்திரத்தில் வேதநாயகம்பிள்ளை படைத்திருப்பது கூட்டுக்குடும்பம். செல்வவளம் பெற்ற குடும்பம் என்பதால் பிரதாப முதலியாருக்கு வேலை செய்து சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

குடும்பப்பூசலால் தனிக்குடித்தனம் அமைக்க வேண்டிய தேவையும் இல்லை. கற்றறிந்த அறிவார்ந்த பெண்களாகச் சுந்தரத்தண்ணியும் ஞானாம்பாளும் படைத்துக் காட்டப்பட்டுள்ளார்கள். அதனால் இந்தக் குடும்பத்தில் வழக்கமான மாமியார், மருமகள் பூசல் இல்லை. பிரதாப முதலியாரின் பாட்டியார் தமது மருமகள் சுந்தரத் தண்ணியை "அவள் அன்னமில்லாதவர்களுக்கு அன்னமும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரமும் கொடுத்து எத்தனை யோ ஏழைக்குடும்பங்களைக் காப்பாற்றி வருகிறாள். அவளுக் காகத்தான் மழை பெய்கிறது வெயில் எரிக்கிறது"4 என்று புகழ்கிறார்.

ஞானாம்பாள் மிகுதியாகப் படித்திருக்கிறோமென்கிற கல்விச் செருக்கில்லாமல் மிகவும் அடக்கமுடைய பெண்மணி யாகக் காட்சியளிக்கிறார். "பெண்கள் எவ்வளவு படித்தாலும் ஆடவர்களை வெல்லமாட்டார்கள். பெண்கள் சிறிது காலத்தில் வளர்ந்து மலர்ந்து விரைவில் கெட்டுப்போகிற சிறு செடிகளுக்கு ஒப்பாக விளங்குகிறார்கள். ஆடவர்களோ என்றால் வெகுநாள் தாமதப்பட்டு வளர்ந்து, நெடுநாள் வரைக்கும் பலன் கொடுக்கிற மரங்களுக்கு ஒப்பாகவிருக்கிறார்கள்"5 என்று ஞானாம்பாள் கூறும் கருத்து தமிழ்நாட்டு மரபுப்படி பெண்கள் ஆடவர்க்கு அடங்கியவராக இருப்பதையே வேதநாயகம்பிள்ளை விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

பிரதாப முதலியார், தங்கள் திருமணத்துக்குத் தடை ஏற்பட்டவுடன், ஞானம்பாளுக்கு, 'எங்காவது மறைவாகப் போய்த் திருமணம் செய்து கொள்ளலாம்' என்று கடிதம் எழுதுகிறார். இக்கடிதத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஞானாம்பாள் தமிழ்ப்பண்பாடு இதற்கு இடம் கொடுக்காது என்று பதில் கடிதம் எழுதுகிறாள். ஐரோப்பியப் பண்பாட்டைச் சுட்டிக்காட்டி அங்கு ஆண், பெண் மறைவாகப் பழகுவதிலுள்ள தீமையை எடுத்துக்காட்டுகிறாள்.

"திருமணமாகாத ஒரு பெண்ணும் மணமாகாதவனும் சேர்ந்து கொண்டு வெளிச் செல்வதினால் உண்டாகிற இழிவும் பழிச் சொல்லும் உலகமுள்ளவரை நீங்குமா?.. மணத்துக்கு முன்பு பெண்ணுக்கும் ஆணுக்கு மறைவிடத்து நடக்கிற

இன்னுரையாடல்களால் விளைகிற தீமைகளைக் குறித்து ஐரோப்பியர்களே முறையிடுகிறதுந் தவிர, நீதி மன்றங்களில் வரும் வழக்குகளினாலும் அந்தத் தீமைகள் இன்னவை என்று நாம் அறிகிறோமல்லவா? அந்தக் கெட்ட வழக்கத்தை இந்நாட்டிற்குக் கொண்டுவர முயற்சி செய்வார்களேயானால் அவர்கள் நாட்டுப் பற்றுடையவர்கள் அல்லரென்பது தெளிவு"6 என்ற வரிகளில் தமிழ்ப் பண்பாடு கெட்டுவிடக்கூடாது என்பதில் வேதநாயகம் பிள்ளைக்கு உள்ள கவலை வெளிப்படுகிறது.

**பெண்களின் ஆற்றல்**

பொய்ச்சாட்சி சொல்லியதாக, பிரதாப முதலியார் உட்பட இருநூறு பிரபுக்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து, நாடு கடத்திவிட கலெக்டர் முடிவு செய்தபோது, சுந்தரத்தண்ணி பெண்கள் குழுவிற்குத் தலைமையேற்று, கவர்னரிடம் கலெக்டரின் சூழ்ச்சியை எடுத்துக்கூறி விடுதலை பெற்றுத் தருகிறாள்.

ஞானாம்பாள் ஆணுருவில் விக்கிரமபுரியின் ஆட்சியை ஏற்று, சிறப்பாக ஆட்சி புரிகிறாள்.

பெண்களால் எதுவும் முடியும் என்பதை 1879-இல் வேதநாயகம்பிள்ளை எழுதிக் காட்டியுள்ளது, அவருடைய தொலை நோக்கினை உணர்த்துகிறது.

**திராவிட இயக்க நாவல்**

பிராமணர்கள் வருணாசிரம தர்மத்தைக்கூறி, சமுதாயத்தில் தாங்கள் மற்ற எல்லாப் பிரிவினரையும்விட மேம்பட்டவர்கள் என்ற கருத்தினை இடைவிடாது மக்கள் மனத்தில் பதியவைத்துக் கொண்டிருந்தனர். மக்கள் தொகை எண்ணிக்கையில் குறைவாக இருந்த இவர்கள், மற்ற இனத்தாரைவிடக் கல்வித்துறையில் மேம்பட்டு விளங்கினர். எல்லாத்துறையிலும் பிராமணர்களே அதிக எண்ணிக்கையில் முதலிடம் பெற்று வருவதைக் கண்டு அச்சமுற்ற பிராமணரல்லாத இனத்தவர்கள் இதற்கு ஒரு தீர்வு காண விழைந் தனர். அதன் முதல்படியே டாக்டர் டி.எம்.நாயர், சர்.பி.தியாகராயர் தோற்றுவித்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கம். இதுவே பின்னர் ஜஸ்டிஸ் கட்சி எனப் பெயர் பெற்றது. இதே ஆண்டில்

தென்னிந்திய விடுதலை இயக்கம் என்ற அமைப்பும் தொடங்கப்பட்டது.

"தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சீர்திருத்த இயக்கத்தில் தமிழ் மாகாண காங்கிரஸ் அமைப்பு முழு அளவில் ஈடுபடவில்லை. தேசியவாதிகளிலேயேயும் முற்போக்கு மனம் படைத்த மிகச்சிலரே சீர்திருத்தப் பணியிலே மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொண்டனர். அவர்களைச் சிறுபான்மையினராக்கிவிடும் வகையிலே வைதிக மனம்படைத்த தேசியவாதிகள் தமிழ் மாகாண காங்கிரசிலே ஆதிக்கம் பெற்றிருந்தனர். அதன் விளைவாகவும், தேசிவயாவதிகளிலே முன்னணியிலிருந்தோரிடை ஏற்பட்ட கோஷ்டிப் பூசல் காரணமாகவும், பெரியார் ஈ.வே.ரா., திரு.எஸ்.இராமநாதன் ஆகிய இருவரும் தேசியப் பாசறையிலிருந்து வெளியேறலாயினர்.

அந்த வெளியேற்றத்தின் விளைவாக, தமிழ்நாட்டிலே சுயமரியாதை இயக்கம் என்னும் பெயரிலே புரட்சிகரமான ஒரு சீர்திருத்த இயக்கம் பிறந்தது. இந்த இயக்கத்தைத் தோற்றுவிக்க முன்னின்று முயற்சி எடுத்தவர் பெரியார் ஈ.வே.இராமசாமியாவர். அவர்தாம் சுயமரியாதை இயக்கத்தின் தாயும் தந்தையும் எனலாம்."7 1944-இல் தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் (நீதிக்கட்சி) என்ற பெயரை மாற்றி, திராவிடர் கழகம் என்று பெயரிட அண்ணாவும் பெரியாரும் சேலத்தில் நடந்த நீதிக் கட்சி மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தனர்.

"திராவிடர் விழிப்புணர்ச்சி காரணமாக எழுந்த ஊக்கத்தினால் தமிழ் இலக்கியம் முழுச் சிறப்புற்று மலர்ந்தது. தமிழ் இசை, கலை, கவிதை, நாடகம் ஆகியவை தனித்த வடிவம் பெற்றன. தமிழ் உரைநடை பல்வேறு வகைகளிலும் விரிவும் வளர்ச்சியும் உடையதாக மாறியது... பேச்சுத்தமிழும் தனிக்கவனம் பெற்றது.... இத்துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுத்தாளர்களும், சொற்பொழிவாளர்களும் பெரிதும் தொண்டாற்றினர்."8

சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த எழுத்தாளர்களுள் ஒருவர் பேரறிஞர் அண்ணா. ஒரு புதிய பரம்பரையின் தலைமகன்.

இவர் பல சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றைச் சமுதாய உணர்வுடன் படைத்துள்ளார். இவருடைய நாவல்களில் சீர்திருத்த இயக்கப் போக்கே தலை சிறந்து நிற்கிறது.

**கபோதிபுரக் காதல் (1952)**

இந்த நாவலின் கரு பொருந்தாமணம். பொருந்தாமணத்தால் பெண்ணின் மனம் சிதைந்து போவதோடு வாழ்க்கையும் சீரழிந்து போய்விடுகிறது என்பதை இந்த நாவலில் விரிவாகச் சித்திரித்துக் காட்டுகிறார் அண்ணா.

"திருமணத்திற்கு வேறு எவ்வகைப் பொருத்தங்களையும் விட மனப்பொருத்தமே சிறந்ததாகும். அண்ணாதுரையின் புதினங்களில் பொருந்தாமணங்களே மிகுதியும் நடைபெறுவது போல் படைக்கப்பட்டுள்ளன. அவர் காலத்தில் நாட்டில் பொருந்தாமணங்களே மலிந்திருந்தன என்பதை அவரது கதைகள் காட்டுகின்றன. பொருந்தாமணங்கள் எங்காவது நடைபெற்றால் அவற்றை எதிர்த்துத் தமது எதிர்ப்புக்குரலை எழுத்துவடிவில் தந்துள்ளார். அவர் நோக்கமெல்லாம் முடை நாற்றம் வீசுகின்ற சமுதாயக்கேடுகளைக் குத்திக் கிளறி எதிர்காலச் சந்ததியினர் அத்தீமையைக் களைய வேண்டுமென்பதேயாகும்."9

இந்நாவலில் இடம் பெறும் சாரதாவின் பெற்றோர் வீராசாமிப்பிள்ளையும் வேதவல்லியும் ஏழ்மை காரணமாக, பதினாறு வயது நிரம்பாத தம் மகளைப் பணக்காரரான அறுபது வயது மாரியப்பப்பிள்ளைக்கு மணமுடித்துத்தர முடிவு செய்கின்றனர். இதனால் கவலையுற்ற சாரதா நோய்வாய்ப் படுகிறாள். இதற்காக, வைத்தியரை நாடாத வீரசாமிப்பிள்ளை, குடும்பத்தோடு மாரிக்குப்பம் அருகில் உள்ள மாரியப்பன் கோவில் பூசாரியிடம் தாயத்து வாங்கிக் கட்ட வருகிறார். வந்த இடத்தில் வண்டியோட்டிப் பிழைக்கும் மாரியப்ப பிள்ளையின் மகள் வயிற்றுப் பேரன் பரந்தாமனும், சாரதாவும் சந்திக்கின்றனர். திருமண வீட்டில் மயக்கமடைந்த சாரதாவுக்கு மருந்து கொடுக்க வந்த பரந்தாமனையும் சாரதாவையும் சந்தேகப்பட்ட மாரியப்பபிள்ளை, பேரனை விரட்டிவிடுகிறார். சாரதாவின் நடத்தையில் களங்கம்

கற்பிக்கப்பட்டு, பிறந்த வீட்டிற்கு அவள் அனுப்பி வைக்கப் படுகிறாள்.

சாரதாவின் அழகால் ஈர்க்கப்பட்ட மாரியப்பப் பிள்ளையின் காரியஸ்தன் கருப்பையா அவரைத்தூண்டி சாரதாவை அழைத்து வரச் செய்கிறான். கிழவர் மாரியப்பப் பிள்ளையை அபினுக்கு அடிமை யாக்கி, சாரதாவைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்கிறான்.

"அவளுடைய கன்னிப்பருவம் காதலைக்கண்டது. அது கருவிலேயே மாண்டது. அவளுடைய இரண்டாம் பிறப்பு கணவனுக்கு மனைவியாக வாழ்க்கையில் ரசமின்றி இயந்திரம் போல் இருந்தது. அன்று தோட்டத்தில் சாகசக்காரக் கருப்பையா விடம் சிக்கியதால் நிகழ்ந்த அவள் மூன்றாம் பிறப்பால் வெளிக்குக் கற்புக்கரசியாகவும் மறைவில் பிறருக்குப் பெண்டாட்டியாகவும் இருக்கும் வாழ்வைப் பெற்றாள்."10

பெண்ணின் மணவாழ்க்கையைப் பெரும்பாலும் பணத்தையும், சாதியையும் கொண்டே நிச்சயிக்கின்றனர். பொருந்தா மணங்களால் பெண்கள் துன்புறுகின்றனர். தவறு செய்யத் தூண்டப்படுகின்றனர். எப்போதும் சமூகப் பழக்க வழக்கங்கள் பெண்களுக்கு எதிராக அமைகின்றன. ஏனென்றால் அவை ஆண்களால் உருவாக்கப்பட்டவை. பெண்கள் தங்களுக் கிசைந்த வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள, சமூகத்தை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. இக்கருத்துக்களையே 'கபோதிபுரக் காதல்' வலியுறுத்துகிறது.

அபினை மிகுதியாக உண்ட மாரியப்பப்பிள்ளை மரித்துவிட, சாரதா, கண்ணற்ற பரந்தாமனைத் துணிச்சலாகக் கைப்பிடிக் கிறாள். எல்லோராலும் ஆட்டிப்படைக்கப்பட்ட அப்பாவி சாரதா, இறுதியில் துணிச்சலாக ஊரறியச் செய்யும் ஒரே செயல், பரந்தாமனை மணந்து கொள்வதுதான்.

**மார்க்சிய நாவல்**

காலப் போக்கில் மனித அறிவு வளர்ச்சியின் வெளிப்பாடாக, மானுட மேம்பாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் உலகெங்கும் பரவலாயின. அவ்வகையில் கார்ல்மார்க்ஸ் போன்ற

பொதுவுடைமைவாதிகளின் கருத்துக்கள் இந்தியாவிலும் அரசியல் சிந்தனையாளர்களின் மனத்தில் இடம் பிடித்தன.

இந்திய மார்க்சியவாதிகள், இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது, போராடும் முறையில் காங்கிரஸ் தலைமையின் போக்கில் கருத்து மாறுபாடு கொண்டு பிரிந்து சென்றவர்களே எனலாம். இவர்கள் மேலைநாட்டிலிருந்து பெற்ற மார்க்சியக் கருத்துக்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, பொருளாதார விடுதலை ஒன்றே மக்களின் உண்மையான விடுதலை என்று நம்பியவர்கள்.

"சமுதாய உற்பத்திப் பொருள்களில் ஒன்று இலக்கியம். சிந்தனை வயலின் விளைபொருளாக இருப்பது, வயலின் விளைபொருளிலே முற்றிய வித்துக்கள் மீண்டும் மண்ணை அடைந்து விளை பொருளைத் தருவிப்பது போலவே சிந்தனையில் உருவான தத்துவங்கள் மீண்டும் சமுதாயத்தையும் சிந்தனையையும் பாதித்து வளர்க்கத் துணைபுரிகின்றன."11

16-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியின் விளைவாக, மேலைநாடுகளைப் போலவே இந்தியாவிலும் மக்கள் வாழ்க்கையின் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. வயல்களில் வேலை பார்த்த மக்களில் பலர் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளின் பயனாக உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தலைப்பட்டனர். இதன் விளைவாக அவர்களுடைய வாழ்க்கைப் போக்கு, கலை, பண்பாடு, சமயச்சிந்தனைகள் அத்தனையிலும் மாற்றங்கள் விளைந்தது, தவிர்க்க முடியாத உண்மையாயிற்று. எனவே படைப்பிலக்கியத்திலும் இத்தாக்கம் ஏற்படுவதைப் படைப்பாளர்களால் தவிர்க்க இயலாது போயிற்று. தமிழ்நாட்டில் இரசிய, சீனநாட்டு மொழிபெயர்ப்புப் படைப்புக்களை வாசகர்கள் பரவலாகப் படிக்கத் தொடங்கியதன் தாக்கமாகவும் இது நிகழ்ந்தது.

**மலரும் சருகும் (1967)**

விவசாயத்தை நம்பி, ஆனால் நிலவுரிமையின்றிப் பிறருக்காக உழைக்கும் சேரி மக்களிடையே சமுதாய மாற்றங்களால் ஏற்படும் தலைமுறை முரண்பாடுகளை டி.செல்வராஜ் 'மலரும் சருகும்' நாவலில் சித்திரிக்கிறார்.

தனிமனிதனுக்குப் பணக்காரவர்க்கம் இழைக்கும் அநீதிகளை வாய்மூடி மௌனமாக ஏற்றுக்கொள்வதே விதி என்ற நிலை, ஓர் அமைப்பின் கீழே ஒன்று திரண்டு குரல் கொடுக்கும் போது, மாற்றப்படுவதை ஆசிரியர் நன்கு சித்திரித்துள்ளார். இதில் பெண்களின் பங்கேற்பும் போராட்டங்களில் முன்னிலை வகிப்பதும் காலத்திற்கேற்ற மாற்றத்தின் விளைவு என்பதாக அறிய முடிகிறது.

சமூகத்தின் அடித்தளத்தில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களில் சிலர் சமூக மாற்றங்களால் மேலே வரும் வாய்ப்புக் கிடைக்கும் போது, அவர்கள் எவ்வாறு தங்கள் பழைய நிலையையும், குடும்பத்துக்கும், இனத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்து சுயநலவாதிகளாய் மாறிவிடுகிறார்கள் என்பதை மாடசாமிக் குடும்பனின் குடும்பத்தின் • வாயிலாக ஆசிரியர் படைத்துக் காட்டியுள்ளார்.

மாடசாமிக்குடும்பன் மகன் ஈசாக். ஈசாக்கின் மகள் கன்னிமரியாள். கன்னிமரியாள் முதலில் அவளுடைய அத்தை மகனான ரத்தினத்துக்குப் பேசி முடிக்கப்படுகிறாள். ரத்தினத்திற்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்ததால், அவன் கன்னிமரியாளை மணக்க மறுத்து விடுகிறான். மணமுடைந்த நிலையிலிருந்த கன்னி மரியாளிடம், பண்ணையாரின் மகன் தவறாக நடக்க முயன்றதை அடுத்து, அவள் சுடலை என்கிற அரைப்பைத்தியத்தை அவளுடைய வீட்டாருக்கு விருப்பம் இல்லாத போதும் கணவனாக ஏற்றுக்கொள்கிறாள்.

பண்ணையாருக்கு எதிரான போராட்டத்தில் மாடசாமிக் குடும்பனின் குடும்பம் காவல் நிலையத்திற்கு, ரத்தினத்தால் இழுத்துச் செல்லப்படுகிறது. ஆவேசம் கொண்ட கன்னிமரியாள் ரத்தினத்தைக் கடுமையாக எதிர்க்கிறாள். அனைவரும் கைது செய்யப்பட்டு வேனில் ஏற்றப்படுகிறார்கள். கைக்குழந்தையைக் கூட விட்டுவிட்டு, மரியாள் ஸ்டேசனுக்குச் செல்கிறாள். துணிச்சலான, சுயமாகச் சிந்திக்கின்ற, சூழலுக்கேற்றவாறு முடிவுகள் எடுக்கின்ற பெண்ணாக விளங்குகிறாள் கன்னிமரியாள்.

இந்நாவலில் இடம்பெறும் ரத்தினத்தின் சகோதரி புஷ்பம், தன் அண்ணனின் செயலை எதிர்க்கிறாள். வீட்டைவிட்டே

வெளியேறி ஆசிரமத்தில் சேருகிறாள். சீர்திருத்தவாதியான பிராமணப் பேராசிரியரை மணக்கிறாள். வள்ளி என்கிற மற்றொரு பெண்பாத்திரம் ஈசாக்கின் மகன் மோசேயை விரும்புகிறாள். மனம் விரும்பிய இளைஞனையே, தடைகளையும் மீறித் திருமணம் செய்து கொள்கிற துணிச்சலான பெண்ணாகப் படைக்கப் பட்டிருக்கிறாள்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எழுத்தோவியம் ஆகும். காலந்தொறும் மானுட சமூகத்தில் நிகழும் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, அறிவியல் மாற்றங்களுக்கு ஏற்ப, வாழ்க்கை முறையும் மாறிவருவது கண்கூடு. இத்தகைய மாற்றங்களை அவ்வக் காலத்துப் படைப்பாளிகள் தங்கள் இலக்கியப் படைப்புகளில் எடுத்துக் காட்டிவருவதும் தவிர்க்க இயலாத கூறாக அமைந்துள்ளது. அந்த வகையில் இங்கே, வெவ்வேறு காலத்தில் தோன்றிய மூன்று நாவல்களில், காலந்தொறும் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு மாறிவந்துள்ளது என்பது படைப்பாசிரியர்கள் சித்திரித்துக் காட்டியவாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. எஸ்.தோதாத்ரி, *தமிழ் நாவல் - சில அடிப்படைகள்*, ப.66.
2. Robert Bierstedt, The Social Order, P.34.
3. Ibid, P.312.
4. வேதநாயகம்பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், ப.29.
5. மேலது, ப.24.
6. மேலது, ப.79.
7. ம.பொ.சிவஞானம், விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக்.287-288.
8. ஏ.என்.சட்டநாதன், வ.ஜெயதேவன், சிவ.மாதவன் (மொ.பெ.ஆ), தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும், ப.13.
9. இரா.சேது, அண்ணாவின் கதை இலக்கியம், பக்.57-58.
10. சி.என்.அண்ணாதுரை, கபோதிபுரக் காதல், ப.41.
11. கோ.தான்யா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்சியக் கொள்கைகளின் தாக்கம், ப.56.

# தான் தேடிக்கொள்ளும் துன்பங்கள் யாவை?

## மணக்குடவர் தரும் விளக்கம்

தன்னால் வரும் துன்பப் பகுதியாவது இன்பங் காரணமாக மனையாள் வழி ஒழுகுதலும், கணிகையரோடு கூடி ஒழுகுதலும், நறவுண்டு (கள், சாராயம்) களித்தலும், சூதாடுதலும் தீய உண்டி மிக வுண்டலும் என ஐந்து வகைப்படும். அவற்றுள், பெண் வழிச்சேறல் ஆவது மனைவியர் வழி ஒழுகுதலினால் வரும் குற்றம் கூறுதல். இது மூன்று வகைப்படும். மனையாளை அஞ்சுதலும், அவள் சொன்னது செய்தலும், அறத்தினும் பொருளினும் சாராத மிக்க காமம் கருதிய காதல்:

---

# இறைவனால் கைவிடப்பட்டவர் யார்?

*"திரு இறைவன் அருட் சக்தியாதலால்*
*பற்றற்றவர் இறைவன் அருளால்*
*பற்றப்பட்டவர் என்பதும், பற்றுவிடாதார்*
*அருளாற் பற்றப்படாது விடப்பட்டவர் என்பதும்*
*கருத்தாதல் கொள்க"*

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவரும்
சேதுபதி அரசவைப் புலவருமான
திரு.இரா.இராகவையங்கார்
புறம் உரை 358 உரை விளக்கப்பகுதி இறுதிவரி.

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் அ.செல்வமணி | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்



(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்,** காமராஜர்சாலை, மதுரை-9.